உ

முருகன் துணை

விவேகபாநு

ஒரு இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறு மறிவு"—திருக்குறள்.

ஆசிரியன்:—எவ்ஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை

"நன்மை கடைப்பிடி" "நாடொப்பன செய்" "உத்தமனுயிரு"

மாலை—க. | விபவஹு வைகாசிமீ 1928ஹு மே, ஜூன்மீ | மலர்—க.

கடவுள் வணக்கம்

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைபடுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடங் களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைகடீர்ப் பாம்.

திருவோங்கு புண்ணியச் செயலோங்கி யன்பருட்
டிறலோங்கு செல்வ மோங்கச்
செறிவோங்க வறிவோங்கி நிறைவான வின்பந்
திகழ்ந்தோங்க வருள் கொடுத்து
மருவோங்கு செங்கமல மலரோங்கு வணமோங்க
வளர்கருணை மயமோங்கி யோர்
வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி யானந்த
வடிவாகி யோங்கி ஞான
உருவோங்கு முணர்வினிறை யொளியோங்கி யோங்குமயி
லூர்ந்தோங்கி யெவ்வு யிர்க்கும்
உறவோங்கு மின்பதமெ னுளமோங்கி வளமோங்க
வுய்கின்ற நாளெந்த நாள்!
தருவோங்கு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி! யுண்முகச் சைவமணி!
சண்முகத் தெய்வ மணியே!

—

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

அவையடக்கம்

நிலமண்டிலவாசிரியப்பா

செந்தமிழ்த் தாயின் செல்வநற் புலவீர்!
நந்தமிழ் மொழியின் நலனுறுஞ் சிறப்பை

கல்வி கேள்வி கற்றிலாச் சிறுவன்
சொல்வ தெதுவென சுருதிய தறியேன்!

அருந்தமிழ் மொழியில் அற்புதக் கவிகள்
பெருமையாய்ச் செய்யப் பேதையா னுணரேன்!

விஞ்சையில் வல்ல வித்வனர் முன்னே
செஞ்சொற் புனைந்து செப்புதற் குதவேன்!

எவ்வெவர் யுக்தியை இயம்பிடுங் காலை
அவ்வவர் மொழிக்கு அடியேன் மறுமொழி

தெளிவுறச் சாற்றி தெவிட்டா தமுதம்
அளித்திடத் தக்க அருமறை யுணராப்

பாலகன் விவேக பானுவை யேற்று
சீலமென் னாசிரிய னாகச் சேர்ந்தப்

பதவியி லமர்ந்து பற்பல விடயம்
சிதமுட னியம்புவன் திகழ்திரு வருளால்!

புலமையில் மிக்கப் புகழுறு மணிகாள்!
நலமிகுஞ் சொல்லை நலமெனக் கொண்மின்!

நலமிலாச் சொல்லை நவின்ற என்பால்
பலபல விவாதம் பகர்ந்திட வேண்டா!

'குணமது கொண்மின்! குற்றம தகற்றுமின்!'
'மணமது கொண்மின்! மணமற்ற தொழிமின்!'

எனவே ஆன்றோர் இயம்பிய உரைகள்
அனந்தம தாதலின் அறநெறி பற்றுமின்!

மானில மீது மாமறை தன்னைத்
தேனெனப் பருகி செகமதிற் றுலங்கும்

பாவலர் நாவலர் பாதமென் சிரமேல்
மேவிட யானும் விழைவுட னேற்று

பத்திரிகைப் பணியில் பண்புட னின்று
உத்தமத் துறையில் உழைத்திடு வேனே.

ஆசிரியன்.

விவேகபாநு

விபவ ௵, வைகாசி ௴

நமது பத்திரிகை

தமிழணங்கின் தவமக்காள்!

திருவுஞ் செல்வமுந் திகழ்ந்து சிறந்து விளங்குமிப் பரத கண்டத்திலே, பல் வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற தண்டமிழ் வல்ல நமது செந்தமிழ் நாட்டிலே, நன்னகரெனப் பகரும் சென்னையம் பதியினின்று, எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவனின் கிருபையால் வெளிவந்த மாத இதழாகிய இதற்கு "விவேகபாநு" என நாம் பெயரிட்டோம்.

பத்திரிகையின் பிரயோஜனத்தைப் பற்றி தாங்களெல்லீரும் எத்துணையோ முறை படித்தும், கேட்டுமிருப்பீர்கள். ஆயினும், நமது "விவேகபாநு" இன்றே இவ்வுலகத்தில் உதயமாகின்றமையால், பத்திரிகையின் பிரயோஜனத்தையும், அதனாலுண்டாகும் நன்மையையும், நமது நோக்கத்தையும் ஆரம்பமாகிய இம் முதலிதழில் எடுத்துக்கூற வேண்டிய தவசியமாகின்றது.

மக்கட் கூட்டத்திற்கு இன்றியமையாத துணைக் கருவியாய்ச் சிறந்து விளங்கும் பத்திரிகைகளை நமது நாட்டினர் சிரத்தையுடன் அபிமானித்து ஆதரிக்க முன்வராம லிருப்பது பெருங்குறைவும், விசனிக்கத் தக்கதுமான செயலாகவே யிருக்கிறது. கல்வி, நாகரிகம், ஒழுக்கம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம் முதலிய பல்வேறு துறைகளில் மேம்பாடடைந்து சிறந்து விளங்கும் இக்காலத்திற் கூட பத்திரிகை என்றால் அதன்பொருள் இன்னதெனத் தெரியாமலிருப்பவர்களும், தெரிந்தும் "கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன்" என்று வாளா விருப்பவரும் நமது நாட்டில் இல்லாமற் போகவில்லை. இத்தகைய அறியாமை முற்றிலும் நம்மவர் மனத்தைவிட்டு அகன்றாலன்றி, நாமும் நமது நாடும் முன்னேற்ற மடைய முடியாது.

உலகத்தில் ஒரு நாடு க்ஷேமமடைய வேண்டுமாயின், அந்நாடு பற் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைதல் வேண்டும். நாட்டின் முன் னேற்றத்திற்கு முக்கிய கருவியாக விளங்குவது பத்திரிகைகள் என்ப திற் சிறிதும் சந்தேகமில்லை. இங்ஙனம், பத்திரிகையும், அதனாலெய்தும் பயனும் அளவுகொண்டுரைத்தற்கியலாது.

உலகில் மேன்மை பெற்று விளங்கும் ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசத்து மக்கள் கல்வி விருத்தியும், செல்வச் சிறப் பும், நுட்ப புத்தியும், தேசாபிமானச் சிந்தையும், ஒற்றுமை யுணர்ச்சி யும், சரீர வலுவும், சௌரிய மனமும், சாஸ்திரவாராய்ச்சியும், தேசத் தைப் பாதுகாக்கும் திறமையும், நவநவமான சாமான்களை உண்டு பண்ணுமியல்பும், வர்த்தகப் பெருக்கமும், இராணுவத் தேர்ச்சியும், மதாபிவிருத்தியும் இன்னும் பல நன்மைகளைப்பெற்று விளங்குவதற் குக் காரணம் பத்திரிகைகளே யாகும்.

மேலும், ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான். முதலிய பிற தேசங் களில் பல்லாயிரக் கணக்கான தினசரிப் பத்திரிகைகளும், வாரப் பத் திரிகைகளும், மாத சஞ்சிகைகளும் வெளியாகி வருகின்றன. இவ் வாறு அந்நாடுகளில் பத்திரிகைகள் தலைசிறந்து விளங்குவதற்குக் கார ணம், அங்குள்ள கூலிக்காரன் முதல் கோமகன் வரையில் பத்திரிகைகளை ஆதரித்து வருவதேயாகும். அதனாலேயே அத்தேசங்கள் எங்கணும் சிறப்புற்று விளங்குகின்றன. அவைகளுடன் நமது நாட்டை ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் காண லாம்.

தற்காலம் நமது நாட்டின்கண் எண்ணிறந்த பத்திரிகைகள் நிலவி நிற்கின்றனவெனினும், இன்னும் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான பத்திரிகைகள் தோன்றுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமான நன்மைகளை நாம் எளிதில் அடைதல் முடியுமென்பதை ஒவ்வொருவ ரும் மனத்திற்கொண்டு பத்திரிகைகளை ஆதரித்தல் வேண்டும்.

நமது நோக்கம்:—இப்பத்திரிகை தன்பெயருக்கேற்ப ஏனைய மக்க ளுக்கும் விவேகத்தைக் கொடுத்து அவர்களை கல்வி, கேள்வி, ஒழுக்கம், முதலியவற்றில் அறிவின் மிக்கராய் விளங்கச் செய்வதுடன், ஆன்ம லாப சம்பந்தம்பற்றிய அரும் பெரும் விடயங்கள், நமது நாட்டின் பூர் வீக வரலாறு, பண்டைப் புலவர் பெருமக்களின் பெருமை, சுகாதாரம், கைத் தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவைகளைக் குறித்த கட் டுரைகள், மாதர் நீதி, மாணவரொழுக்கம், தேசாபிமானிகள் சரித்தி ரங்கள், இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகள், மற்றும் தற்கால நாகரிகத்

திற்கேற்ற விகடம், விநோதம், உலக வர்த்தமானம், பொதுச் செய்திகள், நல்லவழியில் அறிவு செல்லக்கூடிய நவீன நாவல்கள், பஞ்சாங்கம் முதலியவற்றைக் குறித்த பற்பல விடயங்களைத் தன்னுட்கொண்டு படிப்போர் மனதைப் பரவசப்படுத்தி, அறிவைப் பெருக்கி, ஆனந்தத்தைக் கொடுக்க வல்ல இனிய எளிய செந்தமிழ் நடையில் எழுதி வெளியிட்டு வருவதே நமது முழு நோக்கமாகும்.

நாட்டின் நலத்தையும், மக்கள் முன்னேற்றத்தையும் கருதி ஆரம்பித்திருக்கும் நமது "விவேகபாநு"வைத் தமிழ் மக்கள் அனைவரும் அன்புடன் வரவேற்று நல்லாசிகூறி ஆதரிப்பீர்கள் என்று நம்புவதுடன், இச்சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடும் முரஹரி அச்சுக்கூடத்தின் சொந்தக்காரர் ஸ்ரீமான், டி. சேங்கல்வராய நாயுடவர்களையும், இதனை ஆதரிக்கமுன்வரும் பெரியார்களையும், விடயதானம் புரியும் அறிஞர்களையும், சந்தாநேயர்களையும், மற்றும் அபிமானமிக்குற்ற சிலர்களையும் எல்லாம் வல்ல இறைவன் கிருபைகூர்ந்து கடாக்ஷிப்பாராக.

சுபம்! சுபம்!

இப்படிக்கு,
தங்களன்புள்ள,
சு. கு. கோவிந்தசாமி,
போதுஜன ஊழியன்.

உபகாரம்

ஒருவர் செய்யும் உபகாரங்களை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். ஒன்று தேகத்தால் செய்வது. மற்றொன்று மனத்தால் செய்வது. சரீரத்தால் (தேகத்தால்) செய்யும் உபகாரம் சிலாக்கியமேயாகும். ஆனால், அப்படிப்பட்ட உபகாரம் அவசியத்திற்குத் தக்கபடி அதிகப்படலாம். ஒருவனுக்கு ஒருவேளை போஜனம் செய்வித்தால் அது உபகாரந்தான். ஓராண்டு முடிய ஒருவனுக்கு அன்னம் போட்டுவந்தால் இன்னும் அதிகமான உபகாரமேயாகும். மேலும், அவன் எஞ்ஞான்றும் பசியால் வருந்தாமல் அன்னம் போட்டு வந்தால் மகோபகாரமாகும்.

இங்ஙனம், ஒரு மனிதனுக்கு எந்தவிதமான கஷ்டமுமின்றி நித்யானந்தத்தைத் தருவது மேற்கூறிய உபகாரங்களைவிட மகத்தான உப

காரம் ஒன்றுண்டு. அப்படிப்பட்ட உபகாரம் என்னவெனின், ஒரு வனுக்கு ஆத்மஞானத்தைப் போதிப்பதுதான். மனிதனுடைய பிரகிருதி மாறினல், அப்போதுதான் அவனைப் பிடித்த வறுமை நீங்கும். அப்படிப்பட்ட பிரம்மஞானத்தைப் போதிப்பவனேபரமபிதா! அவனே மகோபகாரி! அத்தகைய உபகாரம் செய்கிறவர்கள் மகா வல்லமையுடையவர்கள்! அவர்களை உலகமெல்லாம் போற்றிப் புகழ்ந்துகொண்டாடும். நிர்மல மனதுடையவன் எந்த காரியத்தையும் சாதிக்கமுடியும். தத்துவ ஞானத்திற்கு அடுத்தபடியில் சாதாரண ஞானத்தைச் சொல்லலாம். அதாவது, ஆத்மஞானிக்கு அடுத்த படியில் புத்திசாலியை, (விவேகமுள்ளவனை) வைக்கலாம்.

ஒருவனுக்கு ஞானத்தை யுண்டு பண்ணுவது அன்னவஸ்திரமளிப்பதைவிட ஆயிரமடங்கு அதிகம். ஒருவனுக்கு பிராணனுண்டாக்குவதைவிட ஞானத்தை யுண்டு பண்ணுவது மேலாகும். ஏனெனில், உண்மையான உயிர் மனிதனுக்கிருக்க வேண்டியது ஞானமே யன்றி வேறன்று. அறியாமையே மரணத்திற்குச் சமானம்.

ஆதலின், அஞ்ஞானமாகிய இருளில் உழலும் ஒருவனுக்கு உயிர் இருந்து என்ன பயன்? ஆகவே, முதற்றரமான உபகாரம் ஞானத்தை யுண்டு பண்ணுவது. அதற்கு அடுத்த உபகாரம் புத்தியை யுண்டு பண்ணுவது. அதற்குத் தாழ்ந்த உபகாரமே சரீரத்தால் செய்வது.

ஆகலின், ஒருவருக்கு உபகாரஞ் செய்ய எண்ணி ஐயோ! நம்மிடம் பணமில்லையே, எவ்விதம் உபகாரஞ் செய்யப் போகின்றேமென்று கவலைப்படல் வேண்டாம். பணத்தினுல் செய்யும் உபகாரத்தை ஒரு பெரிய உபகாரமாக நினைப்பது முற்றுந் தவறு. பணத்தினுல் செய்யப்படும் உபகாரம் நீடித்திருக்கமாட்டாது. அந்த உபகாரத்தைப் பெற்றவனும் ஒரு பயனும் அடையமாட்டான். மேலும், பணத்தின் உபகாரத்தைப் பெற்றவன் இம்மையிற் பழிபாவங்களைச் செய்யலாம். அதனுல் அவன் மறுமையில் நரகதுன்பத்தை யனுபவிக்க நேரிடும். இப்பழிபாவங்களும், நரக துன்பமும் உபகாரம் செய்யப்பட்டவனுக்கும் ஆகும். ஆகலின், விவேகமென்னும் உபகாரத்தை செய்யுங்கள்! அதனுல் பல்வேறு நன்மைகளுண்டு. இஃதைச்செய்ய தங்களால் முடியாமற் போனுல் அவ்வுபகாரஞ் செய்பவர்கட்கு உதவிபுரியுங்கள்! அப்பொழுதும் உங்கட்கு நன்மைகள் பல கிடைக்கும். ஆ—ன்.

கட்டுரையை யல்ல கருத்தை உணருங்கள்!

நீதி மஞ்சரி

(உரிமை ஆசிரியருக் குரியது)

---

1. முன்யோசனை

ஒருகாரியத்தைத் தொடங்கு முன்னர் அதைப்பற்றி தீர்க்காலோசனைசெய்து அத்துறையிலிறங்க வேண்டுமல்லாமல், கருமத்தி லீடுபட்டுக்கொண்டு யோசிக்கலாமென்று எண்ணுவது முற்றுந் தவறாகும். இது பற்றியே நாயனாரும் "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்ப திழுக்கு" என்றியம்பினர் போலும்! ஆகவே, யாரும் ஒரு காரியத்திலீடுபடும் முன்னர் அதை சீர்தூக்கிப் பார்த்தலவசியம்.

2. அனுபவஞ் சிறந்தது

எதற்கும் அனுபவ முதிர்ச்சி மிகச் சிறந்ததாகும். அதாவது வியாபாரம், விவசாயம், கைத்தொழில் முதலியவற்றிற்கும், வைத்தியம், சோதிடம், மாந்திரீகம் முதலியவற்றிற்கும், உபாத்திமைத் தொழில், பத்திரிகை நடாத்தல், பாட்டிசைத்தல் முதலியவற்றிற்கும், இன்னும் இதுபோன்ற எல்லாத்தொழிலுக்கும் அனுபவம் வேண்டியதவசியம். அனுபவமின்றிச் செய்யும் எதுவும் செவ்வனே விளங்காது அழிந்து போகும். ஆகலின், அனுபவத்திற் சிறந்தவர்களைப் பின்பற்றி நடந்து கொள்ளுதல் அனுபவமில்லாதவர்களின் கடமையாகும்.

3. சினேகம்

உலகத்தில் யாரும் சினேகமின்றி வாழமுடியாது. ஆகவே, சினேகஞ் செய்வது எத்தகையதா யிருப்பின் நலன்றருமோ அதையே ஒவ்வொருவரும் கைவிடாது நேசித்தல் வேண்டும். சினேகஞ் செய்யு முன்னர் "சேரிட மறிந்து சேர்" "இணக்கமறிந்திணங்கு" என்றியம்பிய ஔவைப் பிராட்டியார் திருவாக்குகளை சிரமேற்கொண்டு நல்லவருடன் சினேகஞ் செய்து பல் வேறு நலனடைதல் வேண்டும்.

4. இல்லற வாழ்க்கை

குடும்ப வாழ்க்கையிலீடுபட்ட கணவனும் மனைவியும் ஒற்றுமையென்னும் ஆபரணத்தை அணிதல் வேண்டும். சதிபதிகட்கு இந்த ஆபரணம் மிகச் சிறந்த பொருள். இப்பொருளுக்கு வேறெந்த பொருளும் இணையாக மாட்டா. ஆகவே, இப்பொருளை இழப்பின் உலகின் கண் எந்த இன்பத்தையும் அனுபவிக்க முடியாதென்பது திண்ணம்.

(வளரும்)

ஆ—ன்.

மயில் பாட்டு

தமிழ் சுயராஜ்யா ஆசிரியர்
சுவாமி சுத்தானந்த பாரதியார் பாடியது

1 வானங் குமுறுதடி—மயிலே
மங்களம் பாடுதடி!
தேன்மழை பெய்குதுபார்—மயிலே
சிறகை விரியடியோ!

2 தென்றற் குழலூத—மயிலே
திங்கள் நிலவினிலே!
மன்றல் புரிந்திடுவோம்—மயிலே
வாழ்வு சிறந்திடுவோம்!

3 சந்தனம் பூசுதுபார்!—மயிலே
சந்திரன் பாரினுக்கே!
சுந்தர மீன்களுடன்—வானந்
தோகை விரித்ததுபார்!

4 பூமியின் தோகையடி—மயிலே
புண்ணிய வானகமே!
காமமுடன் குதிப்பாய்—எனது
காதலர் கண்ணழகே!

5 வெள்ளி வெளுத்தது பார்—மயிலே
விண்ணும் நகைக்குதுபார்!
துள்ளிப் பாயுதுபார்—நதியே
சோதிமய முருகி!

6 முத்தொன்று தோன்றுதுபார்—தங்க
முலாமிட் டுலகினையே!
எத்திசையு மதுவே—அதனில்
எல்லா மறிவாயே!

7 என்னைப் பாராயோ—மயிலே
எல்லா மொளியடியோ!
உன்னைப் பாராயோ—மயிலே
ஒளியைப் பாராயோ!

8 இனிது நடமாடாய்—மயிலே
இன்ப வுலகினிலே!
மனதில் நடமாடாய்!—மயிலே
மங்கள சக்தியிலே!

கலைமகள் மாண்பு

இராயப்பேட்டை, தி. ர. சாரங்கபாணி பிள்ளை பி. ஏ. எழுதுவது.

அயனது நாவில் அமர்ந்து அமர்ந்து, அறிவெனும் ஒளியை எங்கணும் நிலவி, அறியாமை யென்னும் இருளை அழித்து நிற்பவளே கலைமகள் ஆதலான், அறியாமையை அழித்து, அறிவைப் பண்படுத்திடுங் கல்விக்குங் கலைமகளே உரியவள் என்பது தேற்றம். மேலும், கலைமகளின் மாண்புங் கல்வியின் சிறப்பும் ஒன்றே யாதலான், கல்வியின் சிறப்பே கலைமகளின் மாண்பெனக் கோடலே அமைவுடைத்து.

உலகிடையுதித்த ஆறறிவினராகிய நம்மனோர் தேடுதற்குரிய செல்வங்கள் பலவற்றுள் தலைசிறந்து விளங்குவன கல்விச் செல்வமும் பொருட்செல்வமுமே யாகும், அறம், இன்பம், வீடு எனும் புருஷார்த்தங்களையும், கல்வியெனுங் கருந்தனத்தையும் நாம் எய்திடுதற்குத் துணைக்காரணமாக விருந்து பேருதவியாற்றி நின்றிடுவது பொருட் செல்வமேயெனினும், பொருட்செல்வம் அழிந்திடும் தன்மையுடைத்து. செல்வோம் என்ற காரணத்தான் செல்வமெனப் பெயர்பெற்றதாதலின் நிலையற்றது; வெள்ளத்தானும், வெந்தழலானும் அழிந்துபடுவது; பங்காளியர்களானும், விரோதியர்களானும், கள்ளர்களானுங் கொள்ளப் படுவது. ஆனல், கல்விச்செல்வமோ நிலையுள்ள செல்வம்; வெள்ளத்தானும், வெந்தழலானும் அழிந்துபடாத நிதி; ஒருவராலுங் கொள்ளப் படாதபொருள். கல்விச்செல்வம் இகத்தில் பூஜையையும், புகழையும் ஈந்து, பரத்தில் மூரிச்செல்வமாம் அந்தமில் பேரின்பத்தையும் அளிக்க வல்ல ஆற்றலுடையது. மண்ணாளும் மன்னவனினும் மாசறக் கற்றவனே சிறந்தவனெனின், கல்விச்செல்வத்தின் பெருமை நன்கு புலனாகு மன்றோ? அத்தகைய ஒப்புயர்வில் கல்விச் செல்வத்தைக் கொள்வதெவண் என்ற வினு பிறக்கலாம்.

பண்டைக்காலத்தில் நம் முன்னோர், குலம், அருள், தெய்வபக்தி, மேன்மை, கலைபயில் தெளிவு, கட்டுரைவன்மை, உலகியலறிவு முதலிய குணங்கள் மிக்க நல்லாசிரியன் ஒருவனைக் குருவாகக்கொண்டு,

> "பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
> குணத்தொடு பழகி யவன் குறிப்பிற் சார்ந்து
> இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
> பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
> சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
> செவிவா யாக நெஞ்சுகள னாகக்
> கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து"

இக் கல்வியெனுங் கருந்தனத்தைக் கொண்டனர். மேனாட்டு நாகரிகம் மிக்க நங்காலத்தில் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் கல்வி கற்பிக்கப்படுகின்றது. "இளமையிற் கல்" என்ற மூதுரைக் கிணங்க பல்வகைச் செல்வங்களிலுந் தலைசிறந்து விளங்கிடும் இக்கல்விச் செல்வத்தை நாம் எவ்வகையானும் இளமையிலேயே கற்றல்வேண்டும். கல்விக்குக் கரையில்லையாதலான் சிறிது கற்றதுங் கற்றுவிட்டோம் என்ற ஆணவங்கொள்ளாது' "அறிஞர்க் கழகு கற்றுணர்ந்தடங்கல்" என்னும் நன்னெறியை அகத்திடை யிருத்தி, சிறிது கற்றிடினுங் கசடறக் கற்றுக் கற்றவாறு நிற்றலே கற்றவனின் கடனாகும். அவ்வாறு கற்றதற் கிணங்க நிற்பவனே கல்வியெனுங் கருந்தனத்தை உண்மையில் பெற்றவனாவன்.

கல்வியென்பது அறியாமையை அழித்து அறிவைப் பண்படுத்திடுவது. கல்வி பலதிறப்படும். நூற்கல்வி, தொழிற்கல்வி, வியாபாரக் கல்வி, விவசாயக் கல்வி, ஒழுக்கக் கல்வி, சமயக் கல்வி முதலிய கல்வித் துறைகள் யாவும், நம் பண்டைத் தமிழகத்தில் யாண்டும் நிலாவி நின்றன. பண்டைத் தமிழ் மக்களுள் நூற்கல்விப் பயின்று பொலிந்தனர் சிலர்; தொழில்கல்விக் கற்று இலங்கினர் சிலர்; வியாபாரக் கல்வியில் சிறப்புற்றுத் துலங்கினர் சிலர்; ஒழுக்கக் கல்வியில் ஓங்கி விளங்கினர் சிலர்; சமயக் கல்வியில் பேரறிவுபெற்றுச் சிறந்தனர் சிலர்; பண்டைத் தமிழர், நூற்கல்வியோ, தொழிற்கல்வியோ, மற்றெக்கல்வி கற்றிடினும், தாய்மொழியாந் தமிழ்மொழியை அமிழ்தென உண்டு நின்றனர். பல்வேறு கலைகளை அவர்கள் பயின்றிடினும் தமிழ்மொழிமாட்டுஅவர்களுக் கிருந்த ஆர்வம் அழிந்திற்றில்லை.

நூற்கல்வியைக் கற்றலே கல்வியென்றும், அத்தகைய கல்வியைப் பெற்றவர்களே கற்றோர் என்றும் ஓர் எண்ணம், நம்மவருள் எண்ணிறந்தவர் அகத்தில் தற்காலங் குடிகொண்டிருக்கின்றது. அறிவுபெறக் கருவியா யிருப்பனவற்றைக் கற்றவரே கல்வியென்னுங் கருந்தனத்தைப் பெற்றவரெனக் கோடலாகாது. கல்வியென்பது நூற்புலமை மாத்திரம் அன்று. நூற்புலமையின்றியே ஒருவன் இயற்கை வடிவாய் இலங்கும் ஒழுக்கக் கல்வி, விவசாயக் கல்வி முதலிய கல்விகளைப் பயின்று அறிவைப் பண்படுத்திக் கொள்ள வியலும்.

மேனாட்டு நாகரிகம் மிக்க நங்காலத்தில் கல்வியென்பது ஆங்கிலங் கற்றலே என்னும் எண்ணம் நம்மவர் உள்ளத்தில் உதித்திருக்கின்றது. இதற்குக் காரணமென்னை? அறிவைப் பண்படுத்திடுங் கல்வி, அறியாமையை அழித்திடுங் கல்வி, ஊழியக்கல்வியாக மாறியதே யாகும். இதற்கு அரசாங்கத்தினரே காரணராவர். இவ்வாறு அரசாங்க நியதியால் அறிவை வளர்த்திடுங் கல்வி உத்தியோக கல்வியாக மாறத் தமிழ் முன்னையிடம் பற்றுமிக்கிலாத கலாசாலையினரால் அது ஆங்கிலக் கல்வியாக முற்றும் மாற்றப்பட்டது. கலாசாலை மாணவர்கள் எண்ணுவதும் எழுதுவதும், பேசுவதும் ஆங்கிலமயமாகவே இலங்குகின்றது. இந்நிலை

யில், உள்ளும் புறமும் ஆங்கில மயமாக இலங்கும் நம் மாணவர்களுக் குத் தமிழன்னையினிடம் இருந்த பற்று முற்றும் அற்றுவிடுகின்றது.

உத்தியோக வேட்கையானும், நம் நாட்டுக் கல்விமுறையானும், மேனாட்டு நாகரீக உணர்ச்சியானும், உள்ளும் புறமும் ஆங்கிலமய மாக மாறிய நந்தமிழ் மக்களுள் பெரும்பாலோர், தனிமொழியாந் தமிழ்மொழியின் மாண்பையுந் தொன்மையையும், இயற்கைவனப்பும் பிறச்சுவைகளும் மலிந்துகிடக்கும் பண்டைத் தமிழ் நூற்களின் அரு மையையும் பெருமையையும் அறியாது, தமிழ்மொழி இழிமொழி எனக் கருதுகின்றனர். இவ்வாறு தமிழ் மக்களுக்கே தமிழ்மொழி மாட்டு ஆர்வங்குன்றத் தமிழ்மொழியின் மணமுங் குன்றுகின்றது; அதனுடைய வளமும் அருகுகின்றது. நந்தமிழன்னை தன்னுடைவார் குன்றிக் கற்பாரும் புறப்பாருமின்றி, தம்மக்களும் பேசுதற்குக் கூசிக் கைவிட, வளம் வாடி, மணம் குன்றி, துச்சிற்கிடந்து துயருறுகின் றாள். தொன்மையும் மாண்பும் மிக்க நந்தமிழன்னைக்கும் இக்கதியோ? நாட்டுக் கல்வியை பரவ நாடுகளெல்லாம் நாட, நந்தமிழ்நாடு மேனாட்டு மொழியை நம் நாட்டில் பரவ நாடிடுதல் என்ன கோலமோ? தமிழ்த் தாய், புரப்பாரின்றி புலம்பிடத் தமிழ்மக்கள் ஆங்கிலமொழியைப் புர ந்து நிற்றல் நம்மவர்களின் பாஷாபிமானத்தை வெள்ளிடைமலையென விளக்குகின்ற தன்றோ?

தமிழெனனில் தலைதிருப்புந் தற்காலத் தமிழ்மக்களுக்குத் தமிழ் மொழியின் மாண்பையும், தொன்மையையும், பண்டைத் தமிழ் நூற் களின் பெருமையையும் உணர்த்தித் தமிழ்த்தாய்க்குத் தொண்டாற் றிடுதற்கு "விவேகபாநு' மலர்ந்தனன் என நாம் நம்புகிறோம். தனித் தமிழ்த்தாய் மீண்டும் பண்டைய மாண்புடன் நிலவ ஆண்டவன் அருள் புரிக! மாசடையும் தமிழமுதையுண்டு தமிழ்மக்கள் நலம்பெறுக! நூற் கல்வியோ தொழிற் கல்வியோ மற்றெக்கல்வி கற்றிடினும், தமிழன் னையை மறவாது தமிழ் மக்கள் தமிழ் மக்களாய் வதிந்திடுக! கல்விபெ னுங் கருந்தனத்தை யீட்டிக் கலைமகளின் இன்னருளைத் தாங்கி, இம் மையில் பூஜையையும், புகழையும் பெற்று, மறுமையில் பேரின்பத்தை எய்திட அமலன் அருள்புரிக! சுபம்! சுபம்!!

கலைமகள் துதி.

நான்முக நாவின்மேவி நான்மறை வடிவாயின்னம்
தானரும் பொருள்கடேரத் தடக்கையின் முறையுந்தாங்கித்
தேனலர் கமலப்போதிற் செழுத்துவீற் றிருக்குமம்மைக்
கான்மலர் போற்றிநாளும் கருத்துற வணக்கஞ்செய்வாம்.

ஆராய்ச்சிப் பகுதி

"விசால ஹிருதயம்" ஆசிரியர்
ராமசுப்பிரமணிய நாவலர் எழுதுவது

அறஞ்செய விரும்பு

இச்சூத்திரம் ஔவைப் பிராட்டியார் இயற்றியருளிய ஆத்திச்சூடி நூலின் முதற்கண்டது. இச்சூத்திரம் அறம், செய, விரும்பு என்று மூன்று சொல்லானுயதோர் தொடராம். இதனுள் அறம் என்பது பெயர். செயவென்பது செயவெனெச்சம். விரும்பு என்பது ஏவல் வினை. ஆத்திச்சூடி நூலின் கண்ணே போந்த பிற சூத்திரங்கள் பலவற்றினும் வடசொற்கள் கலந்துளவேனும், இச்சூத்திரத்தின் மூன்று சொற்களும் தமிழ்ச்சொற்களாகவே காணப்படுகின்றன. தமிழ்நூலின் முதற்சூத்திரத்தின் கண் வடசொற் கலத்தல் சிறப்பின்றாய் முடிதலானும், மாணவர்க்கு எளிதின் விளங்கும் பொருட்டும் ஆசிரியர் இச்சூத்திரத்தை வடசொற்கலவாமை நிறீஇயது சிறப்புடைத்தே. இச்சூத்திரத்தின் பொருளை இனி முறையே காண்பாம்.

அறம் என்பது நூல்களான் இது செய்தற்குரியது என வரையறுக்கப்பட்டனவா மென்பது மேலோர்கண்ட முடிபா மாகலான், அச்சொற்கு அதுவே பொருளாகக் கொள்ளுதும். அறம் என்பது அறு × அம் எனப் பிரிவு செய்யப்படும். இதன் மறுதலைச் சொல் மறம் என்பது, அஃது மறு × அம் எனப் பிரிவுசெய்யப்படும். அறமல்லாதன மறமாகலின், மறமல்லாதனவெல்லாம் அறமெனக் கொள்க. அன்றி அறம் என்பது தானம் எனக்கொளின், ஆசிரியரால் பின்னர் எடுத்தாளப்படும் "இயல்வது கரவேல்" "தானமது விரும்பு" என்பன முதலாகக் கூறப்பட்ட தொடர்கள் கூறியது கூறலாய் முடிகின்றமையின் அது பொருளென்றென்க. அஃதன்றி அறமென்பதனை இல்லறந் துறவறமெனப்பட்ட விரண்டனுள் உலகியலிற் கொத்த இல்லறமாகக் கொண்டு பொருளுரைப்பின் மேல் "மேல்லினல்லாடோள் சேர்" என்பது முதலாகக் கூறப்பட்டன கூறியது கூறலாய் முடிவதன்றியும் மாணவர்க்கு விரும்பிச் செயற்பாலது இஃதெனக் கூறுவார். முதன் முதலே இல்லறத்தைக் கூறின் பொருட்சிறப்பின்றாயும், முன்னோர் நெறியொடு முரணுயு முடிதலின் அஃது முறையன்மை யறிக. "இதனைச் செய்ய விரும்பு" என்று மாணவரை நோக்கிக் கூறுவார். அம்மாணவர்க்கேற்றதும், அவர்க்கதனாற் பயனுண்டாகத் தக்கதும், அவர்க்கரிதாயுளது மானதோர் செய்கையை கூறல்வேண்டு மென்க. மாணவர்க்கு இன்றியமையாத செயல் எதுவென வாராயின் அவர்

தமது இருமுது குரவரையும், ஆசிரியரையும், தெய்வத்தையும் வணங்குதலும், நித்திய நியமங்களை நெறிபடச் செய்தலும், கற்றலும், கேட்டலும், கற்றவை, கேட்டவை போற்றலு முதலாய கடன் முறைகளைச் செய்தலே யென்பது தெள்ளிதிற் புலப்படும். அன்றேல் அவை அறமெனப்படுமோ வெனின், படுமென்க. என்னை? அவை மாணாக்கர்க்குரியன வென வரையறுக்கப்பட்டமையான் என்க. மாணாக்கர்க்கும் இத்தகைய வாய செய்கைகளையே விரும்புதல் கூடுமன்றித் தம் நிலைக்கொவ்வாதனவற்றை விரும்புதல் இயலாதென்க. எனவே, **அறம்** என்றது ஈண்டு மாணவர் செய்தற்குரிய கடன்முறைகள் என்னும் பொருளையுடைத்து. இச்சொல்லின் கண் 'அ' என்பது தமிழ்மொழிக்கு மாரியத்திற்கு முதலெழுத்தாய் நிற்றலுமோர் சிறப்புப் பயப்பதாமென்க. திருக்குறளில் 'அகரமுதல வெழுத்தெல்லாம்' என அகரத்தை முதற்கண் வைத்ததூஉம் காண்க.

(தொடரும்.)

மாதர் பகுதி

(ஸ்ரீமதி; ஆர். இரங்கமணி அம்மாள் எழுதுவது.)

இந்திய ஸ்த்ரீகளின் முன்னேற்றம்

மேனாட்டுத் தேசங்கள் தொழில் முறைகளிலும், வியாபாரத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றன. அத்தேசத்தவர்கள் தங்களுடைய சரக்குகளை விற்று முதல் செய்வதற்கும், வியாபாரத்தை விருத்தி செய்வதற்கும் கீழ் நாட்டுப் பிரதேசங்களை அநேகவிதமாய் கைப்பற்றிக்கொண்டும், அப்படிக் கைப்பற்றப் படாத தேசங்களில் அநேகவிதமான நன்மைகளை யேற்படுத்திக் கொண்டும், அத்தேசத்தவர்களுடைய சுதந்திரத்திற்கு நானாவிதமான பங்கங்களை யுண்டாக்கியிருக்கிறார்கள். அதுகாரணமாய்த் தங்களுடைய வியாபாரங்களுக்குச் சௌகர்யங்களை ஏற்படுத்திக்கொண்டு கீழ்நாட்டுப் பிரதேசங்களுடைய பொருளாதார நிலைமையையும் கெடுத்திருக்கிறார்கள். தற்காலத்தில் கீழ்நாட்டுப் பிரதேசங்களில் ஜனங்கள் விழித்துக்கொண்டு தங்கள் தேசமுன்னேற்றத்திற்காக அநேக துறைகளில் பாடுபடுகின்றார்கள். இந்த இயக்கங்களில் அத்தேச ஸ்த்ரீகளும் கலந்துகொண்டு அவர்களுடைய கடமைகளையும் நிறைவேற்ற முயலுவது குறிப்பிடத் தக்கது.

கீழ்நாட்டுத் தேசமாக விருந்தும், வல்லரசுகளுக்கு சமானமான பலத்தடைந்திருக்கிற ஜப்பான் தேசத்தில் ஸ்த்ரீகள் நடை உடை பாவனைகளில்

கூட மேல்நாட்டவர்களைப் பின்பற்றி யிருக்கிறார்கள். சைனாதேசத்தில் தற்காலம் நடந்துகொண்டிருக்கும் கலவரங்களினிடையே அத்தேச ஸ்த்ரீகளின் இயக்கமும் தலைதூக்குகிறது. அவர்கள் தங்களுடைய கொள்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் விரும்புவது என்னவென்றால் பெண்களுக்கு சமத்துவ உரிமை, பல பெண்களை விவாகம் செய்துகொள்வதைத் தடுத்தல், பாலிய மணத்தைத் தடுத்தல், கால் பாதங்களை குரூபம் செய்வதை நிறுத்தல், புனர் விவாஹம் இவைகளேயாம். இது ஒருபுறமிருக்க, அந்த ஸ்த்ரீகள் ராணுவப் பயிற்சியிலும் சிலர் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது. துருக்கி, பர்ஷியா, ஆப்கானிஸ்தான் முதலிய தேசங்களில்கூட கோஷாவில் கட்டுப்பட்டிருந்த ஸ்த்ரீகள் தங்களுடைய கோஷாப் பத்ததியை உதரிக்கொண்டு வெளியில் வந்து கல்வியிலும், தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவும் தவிர, சில கீழ்நாட்டுத் தேசங்களில் ஸ்த்ரீகள் உத்தியோகங்களிலும், வக்கீல் தொழிலிலும் அமர்ந்திருக்கிறார்கள். மேலும் மேல்நாட்டு ஸ்த்ரீகளை யனுசரித்து கீழ்நாட்டு ஸ்தரீகளும் ஓட்டுச் சுதந்திரம், சொத்துரிமை, சம அந்தஸ்து இவைகளுக்காக விசேஷ கிளர்ச்சி செய்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் தங்கள் தேசங்களில் தங்களுக்கு உரிமை சம்பாதித்துக் கொண்டு தேசமுன்னேற்றத்திற்கு தங்களுடைய முழுபலத்தையும் செலுத்தவேண்டுமென்பதேயாகும். நம் தேசம் நாகரீகமானது. பூர்வகாலத்தில் ஸ்த்ரீகளுக்கு விசேஷமான உரிமைகளிருந்தன. வேதங்கள் பிறந்தகாலத்தில் ஸ்த்ரீகளுக்கு உயர்ந்த அந்தஸ்து இருந்ததென்று தெரிகிறது. பண்டைக்கால நூல்களில் ஸ்த்ரீயை புருஷனுடைய பாதிபாகமாகக் கருதப்பட்டது. ஈசுவரனுடைய வுடலை அர்த்தநாரீசுவர ரூபமாகக் காட்டியிருப்பதின் அர்த்தம் இதுவே. ப்ரகிருதிக்கு பெண் ஸ்வரூபத்தை அளித்திருப்பதின் அர்த்தமுமிதுவே. இப்பேர்ப்பட்ட தேசத்தில் மனுநீதியும், மற்ற தருமசாஸ்திரங்களும் ஏற்பட்ட காலத்தில் சில காரணங்களால் பெண்களின்பேரில் சில கட்டுப்பாடுகள் சுமத்தப்பட்டன. மனுஸ்மிருதி பிரகாரம் ஸ்த்ரீகளுடைய கடமைகள் குறிக்கப்பட்டிருப்பதைக் கவனிப்போம். குழந்தைப் பருவத்தில் ஒரு பெண் தகப்பனாருக்கு அடங்கியிருக்க வேண்டியது, இளமைப் பருவத்தில் புருஷனுக்கும், அவனுடைய காலத்திற்குப் பிறகு தன் புத்திரர்களுக்கும் அடங்கியிருக்க வேண்டியது. அவள் உற்சாகமாயும், வீட்டுக்காரியங்களை சரிவர செய்துகொண்டும், செலவுகளைச் சுருக்கிக்கொண்டும், பாத்திரங்களைச் சுத்திசெய்துகொண்டும், தன் தகப்பனாவது, சகோதரனாவது, தன்னை விவாகம்செய்துகொண்ட புருஷனுக்காவது அடங்கி வணங்கி நடக்க வேண்டியது. புருஷன் அயோக்யனாயிருந்தாலும் அவனுக்கு அவசியம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று நீதி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதே மனுஸ்மிருதியில் ஸ்த்ரீகளை ஸரியாக நடத்தினால் தெய்வத்திற்கு ப்ரீதியென்றும் காணப்படுகிறது. ஸ்த்ரீகள் துக்கப்பட்டால் குடும்பத்திற்கே கெடுதலென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுகளையெல்லாம் உத்தேசிக்கும்போது நமது தேசத்தில் ஸ்த்ரீகளுக்கு குடும்பங்களில் மாத்திரம் சில சௌகர்யங்களும், சமூகவாழ்வில் விசேஷமான கட்டுப்பாடுகளும் ஏற்பட்டிருந்தனவென்று தெரிகிறது. என்ன கட்டுப்பாடுகளிருந்தபோதிலும், நம்முடைய மதாசாரங்கள், மதக்கொள்கைகள் இவைகள் காரணமாய் நம் தேசஸ்த்ரீகளுக்கு இக்காலத்திலிருப்பதைவிட மனு காலத்திற்கு முன்னர் விசேஷ மதிப்பும் செல்வாக்கும் இருந்தது.

பிறகு மகம்மதியர்கள் நம் தேசத்தைக் கைப்பற்றினர்கள். அவர்கள் தங்களுடைய ஸ்த்ரீகளை கோஷாக்களாக்கி திரைக்குள் மறைத்துவைத்து, அந்தஸ்த்தைக் கொடுத்தவர்கள். கோஷா முறையை யனுசரிக்காமல் வெளியில் சுயேச்சையாக நடமாடிக்கொண்டிருந்த இந்தியஸ்த்ரீகளை கெட்ட அபிப்பிராயத்தோடு நோக்கினர்கள். இந்த மகம்மதியர்களுடைய அரசாக்ஷி நம் தேசத்தில் வெகுகாலமாக நிலைத்திருந்து விட்டதினால் நம் தேசஸ்த்ரீகளின் ஸ்திதி முன்னேறவில்லை. அதன்பிறகு பிரிட்டிஷ் ஆக்ஷி இந்தியாவிலேற்பட்டு சுமார் நூற்றைம்பது வருஷமாயிற்று. இப்பொழுது ஸ்த்ரீகளுடைய நிலைமை எவ்வாறிருக்கிறதென்பதைக் கவனிப்போம். ஒரு நாகரிகமான தேசத்தினுடைய சின்னங்கள் அத்தேச ஜனங்களுடைய கல்வி, உற்சாகம், தொழில், தேகாரோக்கியம் இவைகளே. இந்தக்கொள்கைகளின் பிரகாரம் கவனித்தோமேயானல் நமது தேசஸ்த்ரீகள் எவ்வளவு தாழ்ந்த நிலைமையில் யிருக்கிறார்களென்பது நன்ருக விளங்கும். நூற்றுக்கு ஒரு ஸ்த்ரிதான் கற்றவளெனலாம். குறிப்பிடக்கூடிய தொழில்கள் ஒன்றுமில்லை. சிசுமரணம், பால்யமணம் இவைகளுமதிகரித்திருக்கிறது. க்ஷயரோகம் கட்டி இம்மாதிரி வியாதிகளும் அதிகரிக்கின்றன. ஸத்ரிகளுக்கு பலக்குறைவினலும் பொருள் சௌகர்யமில்லாமையினலும் உற்சாகக் குறைவும் ஏற்பட்டிருக்கிறது. இத்துணை துர்ப்பாக்கியங்களின் இடையில் ஒருவிதமான அதிர்ஷ்டமும் உதித்திருக்கிறது. மேல்நாட்டு ஸ்த்ரீகள் மிகுந்த சிரமத்தோடு அடைந்த ஓட்டுச் சுதந்திரம் நம் தேசஸ்த்ரீகளுக்கும் அதிக சிரமமில்லாமலே கிடைத்துவிட்டது. சென்னை சட்டசபையில் ஒரு ஸ்த்ரீ அக்கிராசனம் வகிக்கும்படியாக யேற்பட்டது உலகிற்கே இதுதான் முதல்தடவை யாகும். இன்னும் சில ஸ்த்ரீகள் தற்காலத்தில் ஸ்தல ஸ்தாபனங்களிலும், கௌரவ மாஜிஸ்ரேட்டு கோர்ட்டுகளிலும் பதவிகள் பெற்றிருக்கிருர்கள்.

இவைகளினல் மாத்திரம் நமது தேசம் முன்னேறிவிடாது. கோடி ஜனங்களின் மத்தியில் ஒருவன் உயர்ந்த பதவிக்கு வந்துவிட்டாலும், கோடிக்கணக்கான ஸ்த்ரீகள் மத்தியில் ஐந்தாறுபேர்கள் இம்மாதிரி கௌரவ பதவியை யடைந்துவிட்டாலும், அது தேசமுன்னேற்றத்திற்காவது, ஸ்த்ரீகளின் முன்னேற்றத்திற்காவது அஸ்திவாரமாக மாட்டாது. பொதுஜனங்களிடத்தில் கல்வியும் செல்வமும் ஏற்பட்டு உற்சாகமாக விருக்கவேண்டும். கல்வியிலாக்காவும், தொழில் யிலாக்காவும், ஜனப்பிரதிநிதிகளிடத்திலிருப்பதினல் நமது ஸ்த்ரீகள் இவர்களை வற்புறுத்தி வேண்டிய சீர்திருத்தங்கள் செய்வித்தல் வேண்டும். நம் தேசத்தில் விஷயம் தெரிந்த ஸ்த்ரீகள் தங்களாலியன்றவரையில் தேச முன்னேற்றத்தைப் பற்றி மற்ற சகோதரிகளிடையே பிரசாரம் செய்தல் வேண்டும். சிறிய கிராமங்களில்கூட ஸ்த்ரீ சமாஜங்கள் யேற்பட்டு நம்முடைய தேவைகளை விவஹரித்தல் வேண்டும். வருஷத்திற்கொருமுறை முக்கியமான யிடங்களில் மகாநாடுகளும் கூடவேண்டும். அவைகளுக்கு கவர்னர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களும், அவர்களுடைய சீமாட்டிகளும் வந்து கவனிக்கும்படியாக அவர்களை அழைத்து அவர்களுடைய ஆதரவைப் பெறல்வேண்டும். இப்போது உலகெங்கும் சம உரிமை இயக்கம் உதித்திருக்கும் காலத்தில் பொதுஜனங்களுடைய விருத்தியை முக்கியமாக கருதி செய்யும் பிரயத்தினங்கள்தான் தேசமுன்னேற்றத்திற்கு அனுகூலமாகும். ஆகையினல் ஸ்த்ரீசமாஜங்கள் நாடெங்கும் தேவையென்பதுதான் என்னுடைய கருத்து.

இதை நிறைவேற்றுமாறு எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

நமது நீதிக்கதைப் பகுதி

குடியாத்தம் "சேஷவிலாஸ், தமிழாசிரியன்
லால்குடி சே. கந்தசாமி எழுதுவது.

அலமேலு மூட்டிய அவியா நெருப்பு

அலமேலு! ஆகா! அந்தப்பெயரை எழுதும்பொழுதே என் கைகள் நடுங்குகின்றன. கண்கள் அழுகின்றன. மனம் நடந்த பழைய விஷயங்களை ஞாபகத்திற்குக் கொண்டுவருகின்றது. அந்த அலமேலு என்னும் பெயரை எண்ணும்போதே யாரோ கூப்பிட்டனுப்பியதுபோலத் தயாராக அப்பெயருக்குடைய அவள் என் மனக்கண்ணில் வந்து நிற்கிறாள். பதினையாண்டுகளைக் கடந்து 16—வது ஆண்டை எட்டிப் பார்த்திருந்த அக்கட்டழகியின் நெட்டையானதும், உயரத்திற்கு ஒத்தபடி பருத்ததுமான உருவத்தை உங்களில்பலர் பார்த்து இருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். என் மனமெய்களைக் கவர்ந்த அந்நாரீமணியினிடம், இன்னது என்று என்னால் உரைக்கமுடியாத ஒரு வசீகர சக்தி குடியிருந்ததனால் தான் பைரவிவனப் பாலிகைகள் பலரிலும் அவள் நக்ஷத்திரத்திரங்களுக்கிடையில் சந்திரனைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தாள். மேகபடலத்தைப்போலக் கருத்து, அடர்ந்து, சுருண்டு, நீண்டு பிரகாசித்த அவளது அளகபாரத்தையும்; தன் மனம் நாடிய ஒப்பற்ற ஒரு புருஷனைமாத்திரம் இழுத்துச் சிக்கவைக்கும் சக்திவாய்ந்ததும், ஆனால் கெட்டவழிகளில் ஒருபோதும் பிரயோஜனப்படுத்தப் படாததுமான ஆலாலம் போலக் கருத்த மான்விழிக் கண்களையும், அவைகளைக் காப்பாற்றிக்கொண்டிருந்த விற்புருவங்களையும், கண்டு களிக்காதவர்களில்லை என்றால், நான் கண்டு, கேத்திரங்களினால் உண்டு, உவந்து, அனுபவிக்க ஆர்வங்கொண்டது மிகையாகுமா? புன்சிரிப்பு தவழ்ந்த அவளது உதடுகளும், அவை பிரியும்போது தென்படும் குற்றமற்ற, சுத்தமான அரும்புப் பற்களும் என்னை வஸ்யம் செய்து அடிமையாக்கிக்கொண்டுவிட்டன. கந்தையாயிருந்தாலும் மலினமற்றிருந்த அவளது ஆடைகள் அவளைத் தழுவிக்கொண்டிருந்ததாலேயே அழகு பெற்று விளங்கின. பொருமையுள்ள அன்பர்களே! பலபலப் பேசி என்ன? பிரமனும் பார்த்து திசயிக்கத்தக்க அக்காமரூபியை உங்களில் யாராவது ஒருமுறையாவது பார்க்கும்படியான பாக்கியத்தைப் பண்ணியிருந்தாலும் சரி, எங்கேரமும் எக்கிஷமும், எவ்விடிையும் பார்க்கப்பட்ட அவ்ரூபத்தை அகக்கண்ணைவிட்டகற்றுவது அருமையிலும் அருமையாகுமவருக்கு என்னில், பலதடவைகளில் கண்ணும் மனமும் களிக்கும்படிப் பார்த்தும், ஆசையுடன் பேசியும், அன்பை வெளியிட்டும், அனுபவிக்கப்பெறாத எனக்கு, அவ்வுத்தமியை மனத்தினின்றும் அகற்றுவது சுலபமாயிருக்குமா? உம்—.என் கதையை வீணாகவளர்த்தவேண்டும். கிட்டாப் பழமான அந்நங்கையைப்பற்றி நாம் இனிப்பேசுவதும் நன்றல்ல, ஆயினும்,எனக்கு

அவ்வனிதாமணியால் சதா சர்வகாலமும் தன் மனக்கோவிலில் வைக்கப்பட்டு பூசிக்கப்பட்ட எனக்கு அப்பழம் கிட்டாது போனதைப் பற்றியும், அதனுல் ஒரு அழகொழுகும் மங்கையின் வாழ்வு அநியாயமாய் மணமற்றுப்போனதைப்பற்றியும் உண்டாகி, வளர்ந்துகொண்டேவரும் துக்கத்திற்குப் போக்குமடையாக இதனை எழுத முன்வந்தேன்.

கூடினவருக் கின்பத்தையும், பிரிந்தவர்க்குத் துன்பத்தையுந் தாவல்ல ஒரு வெள்ளிக்கிழமை வந்தது. அன்று மாலை அதாவது, சூரியன் மேற்கு மலைக்குப் பின் மறைந்துகொண்டிருந்த அந்தச் சமயத்தில் செய்யவேண்டிய நித்திய கருமத்தை முடித்து வழக்கப்படி 'ஸகஸ்ரநாம ராமாயணம்' செய்துமுடித்தேன். 'அங்கு மிங்கு மெங்கும் பிரகாசமா யிருப்பவரும், தன்னை அடைந்தவர்களுக்குச் சர்வாபீஷ்டங்களைக் கொடுப்பவரும், நித்யரும், பாதத்தைத் தமது திருவடிக்குள் அடக்கி நடிப்பவரும், திரிபுரம் எரிக்க நகைப்பவரும், பரவையிற் பிறந்தவிடத்தை மிடற்றில் இடுபவரும், பலிபிடப்பெறும் பிரமகபாலமாகிய பாண்டக் கரத்தரும், பகீரதியற்ற சிரத்தரும், பராபரரும், பொருப்பில் இருப்பவரும், உமையொரு பாகத்தரும், அடியார் பிறப்பை அறுப்பவரும், சுடலைப்பொடியை உடலில் பூசியவரும், விடையேறும் வித்தகரும், மதனனைக் கடிந்தவரும்; ஆன சிவனது அருள் செல்வமே! கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானே! கரவர்பால் விரவாடும் பெருமானே! மதுகரம், மேகம், மாநிதி, மதன், மருத்து, மந, மத்தன், மற்கடம் மச்சம் என்னும் இவைபோல் சஞ்சலிக்கும் என் மனத்தை ஒரு வழி நிற்க உதவுவீர்! என்று ஆண்டவனை வேண்டி,

உமையவள் மதலாய் போற்றி! ஓமெனு முதல்வா போற்றி!
இமையவர் இடுக்கண் தீர்த்த எதிலர்க் கேறே போற்றி!
மூமைபுநற் றுணையே போற்றி! முருகசுந் தரனே போற்றி!
கொரமைமத ரிளமென் கொங்கை குஞ்சரிம ணாள போற்றி!

என்று கையுடன் மனமுங்கூப்பி வாயாற, என்பெலாம் நெக்குருக, விழிகனீர் ஆறாகப்பெருக ஸ்தோத்தரித்தேன்.

பிறகு ஆண்டவன் பிரசாதமாகிய திருநீற்றைத் தாரணம் செய்துகொண்டு ஆண்டவன் திருப்பாதார விந்தத்தில் விழுந்திருந்த அர்ச்சிக்கப்பட்ட நறுமணங் கமழும் புஷ்பத்தைக் கண்ணில் ஒத்திக்கொள்ள என்றும்போல் அன்றும் எடுத்தேன்; என் தலையில் விழக் காத்துக்கொண்டிருந்த துன்பத்தைச் சாடையாய்க் காட்டுவதுபோல, எடுக்கப்பட்ட புஷ்பம் கைதவறிக் கீழேவிழும்படி கடவுள் கடாக்ஷித்தார். அவ்வப சகுனத்தை எந்த நிமிஷத்தில் என் புலனறிந்ததோ அப்போதே என் தலையில் ஒரு பேரிடி யிடித்து விழுந்ததுபோலத் தோற்றிற்று. மனம் கலங்கிற்று. உடனே "ஏ ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! ஆறுமுகனே! இபமுகத்திளவனே! ஈராறு கையனே! உலகளந்தோன் மருகா! கார்த்திகேயா! வள்ளி மணாளா! நேருவன வெல்லாம் நலத்திற்காகவே என்பதும், தமது அடியார்க்கடியனும், புத்திரனுமான எனக்குத் தாம் ஒரு கெடுதலையும் உண்டாக்கமாட்டீர் என்பதும் வாஸ்தவமேயாயினும் அக்ஞானத்தினுல் அல்லலுறும் எற்குச் சிறிது தயை

செய்து தைரிய மொழிகள் மொழிபலாகாதா! என்று முறையிட்டுக்கொண்டே இருக்கும்போது திடீரென்று திருவிளக்கு மலையேறிவிட்டது. புண்ணிலாம் பெரும் புழையில் அனல் நுழைந்தாற்போல அக்காக்ஷிபுட் புகுந்தது. அதனால் அங்கேயிருந்த துபரம் உந்த, உள் நிலாவிய ஆருயிர் ஊசலாட யான்பட்டபாடு இத்தன்மைத்து என்று என்னால் சொல்ல சாத்தியப்படவில்லை.

'ஆகா! ஆண்டவன் நம் பூசையில் திருப்தியடையாததற்கு நாம் என்ன குறைவு செய்துவிட்டோமோ ,தெரியவில்லை' என்று எண்ணிக்கொண்டே தீபத்தை ஏத்தினேன். மனம் சமாதானத்தை அடைந்திராததால் மறுபடியும் அவ் வறுமுகக்கடவுளை விளித்து, 'படவிக்கு அணிதுகில் எனவளர் எழு அலைகடல்களையும் அறவே குடித்த குறுமுனிக்கு உபதேசித்த, செந்தில்வளரும் கந்தப்பெருமானே! தமது பன்னிரண்டு திருவிழிகளுக்கும் பாவியேன் பாடு புலனாகவில்லையோ? ஈராறு செவிகளில் ஒன்றினால் என் வருத்தங்கேட்டு, ஒரு முகத்தால் நோக்கி, ஒருகண்ணின் கடைக்கண்ணருள் கடாக்ஷித்து ஒருகையால் என்னை அஞ்சேல் என்று கைதூக்கிக் காப்பாற்றக் கூடாதா?'' என்று பிரார்த்திக்கும் போது என் இடது கண்ணும், இடது புஜமும் படபடவென்று துடித்தன. அதனால் நான் இன்னும் கவலைப்பட என் மனம் அலமேலுவை நாடிற்று. உடனே திரும்பினேன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிரவர்த்த ஸ்ரீமதியம்பாள் திருச்சந்நிதிக்கு நைவேத்யம் செய்யவேண்டிப் போகும்போது என்னுடைய வீட்டிலும் நுழைந்து என்னையும் அழைத்துப்போகும் அப்பெண்ணினல்லாள் என் கண்களுக்குத் தெரியவில்லை. 'ஏன் அவள் இன்னும் வரவில்லை? என்றெண்ணிக்கொண்டே, 'ஒருவேளை என் ஸஹஸ்ரநாம பாராயணம் தான் விரைவில் முடிந்துவிட்டதோ? என்று ஐயம் கொண்டு பக்கத்தில் இருந்த கெடியாரத்தைப் பார்த்தபோது சிறியமுள் 8-க்கும் 9-க்கும் மத்தியிலும், பெரியமுள் ஆறிலும் இருந்தன.

''இதென்ன? என் அத்தை பேத்தியான அவ்வலமேலு இன்னும் ஏன் வந்திலே? $7\frac{1}{2}$-மணிக்குள்ளேயே வரும் அவ்வழகுவல்லி $8\frac{1}{2}$-மணியாகியும் வராததால் அவளைப்பற்றியே என் மனம் சஞ்சலப்படுகின்றது. என் அன்பிற்கு உறைவிடமே என்னைக்கண்டு மோகாவண்ணம் உனக்கேதாவது இடையூறு நேரிட்டதோ?'' என்று நினைக்கும்போதே என் கண்களில் நீர் பலபலவென்று வழிந்தது. வருஷக்கணக்காய் காயலாவாயிருந்தவன் வைத்தியனுடைய பலவந்தத்தின்மேல் இரண்டடி நடப்பானேல் அவன் எத்தனை பலவீனனாயிருப்பதை அறிவானோ அதற்கு மேலும் நான் பலயீனனாயிருந்ததுபோல வெனக்குத் தோன்றிற்று. மனவமைதியிருந்தமையினால், ஏதோ ஒருவாறு என் பூசையை முடித்து, மேசைக்கருகில் நாற்காலியிலமர்ந்து என் மனச்சிறை புகுந்த எழிலணங்கைப்பற்றிப் பலவாறு யோசனையிலாழ்ந்தேன்.

எத்தனை நாழிகை அவ்வாறு இருந்திருப்பேனோ அறியேன். யோசனை ஒருவாறு முற்றினதும் கண்ணை விழித்துப் பார்த்தேன். என் ஆகத்தைக் கொள்ளை கொண்ட அலமேலு உருவம் தோன்றியதுபோலிருந்தது. (வரும்)

தமிழ்க் கணக்கு

தமிழ்ப் பண்டிதர் அ. கோபாலய்யர் எழுதியது.

"எண்ணெழுத்திகழேல்" "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்" என்பன ஔவையார் வாக்கினின்றும் வந்தவை. இவ்வாக்கியங்களை யிகழ்ந்து தமிழர் பெரும்பாலும் கண்ணிழந்தவராய்க் கொண்டு வருகின்றனர். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மட்டும் சில்லாண்டுகளுக்கு முன் வரையிலும் இவ்வாக்கியங்களை யிகழாமற்கற்று, தங்கள் கணக்குகளை யெல்லாம் தமிழெண்ணிலேயே எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலக் கல்வியின் முறை அவர்கள் நாட்டிலும் பரவவே, இப்பொழுது அவர்களும் நாளுக்குநாள் தமிழெண்ணைக் கைவிட்டு வருகிறார்கள்.

முன் காலத்தில் ஆரம்பக்கல்வி பயிற்றுமுறை, சிற்றூர்களிலுங் கூடச் செவ்வனே நடைபெற்று வந்தது. அரிச்சுவடி, இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, கீழ்வாயிலக்கம், குழிமாற்று என்பன முறையே கற்பிக்கப்பட்டுவந்தன. அரிச்சுவடி என்பது எழுத்தையும் ஏனைய ஐந்து சுவடிகள் எண்ணையும் குறிப்பனவாம். அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்கள் 247 ஆகும். இவ்வெழுத்துக்களை வரிசையாகக் கற்பித்த பின்னர், ஆசிரியர்கள் எண்ணுக்குரிய சுவடிகளை ஒவ்வொன்றாக கற்பிப்பார்கள். அதனோடு நில்லாமல் எழுத்தாலாகிய பதங்களையும் ஓரெழுத்துப்பதம், ஈரெழுத்துப்பதம், மூவெழுத்துப்பதம், நாலெழுத்துப்பதம் என்று வரிசையாகக் கற்பித்துக்கொண்டே போவார்கள். இவையாவும் ஓலையில் எழுதப்படும். பிள்ளைகள் கைப்பழகுவதற்காகச் சட்டம் எழுதுவார்கள்.

இம்முறையில் மேற்கண்ட ஆறுசுவடிகளும் பதங்களும் கற்றுக்கொண்ட பின்னர் மாணவர்க்குச் சொற்றொடர்களையும் கணக்குப்பார்க்கும் விதங்களையும் ஆசிரியர் கற்பிப்பர். ஊர்தோறும் இத்தகைய பள்ளிக்கூடங்கள் இருந்ததனாலே ஏழைகள் முதல் பணக்காரர் வரையிலுமுள்ள யாவரும் இலேசாகக் கல்வி பயின்று அதன் பின்னர்த் தத்தம் தொழில்களில் புகுந்து அவற்றையும் முறையாகக்கற்றுப் பழகுவார்கள். இதனாலே தான் கல்வியிற் பெரிய கம்பரும் அக்காலத்தில் "கல்லாதுநிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்றவல்லாருமில்லை யவை வல்லரல்லாருமில்லை" என்று அழகாகக் கூறியருளினர்.

அத்தகைய தமிழ்க்கல்வி நாளுக்குநாள் குறைந்து வருகின்றது. அரிச்சுவடி கற்பிப்பதில்லை. எழுத்துக்களை ட, ப, என்று தொடங்குகிறார்கள்; தமிழில் மொழிக்கு முதலாகாத டகரம் முதலாக்கப்பட்டு டப்பி, டமாரம் என்று எழுதப்பட்ட புத்தகங்கள் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுப் பாடமாக வைக்கப்பெறுகின்றன. பழைய முறைப்படி அழகாக எழுதப்பட்ட நாவலர் பாலபாடங்கள் முதலியன புறக்கணிக்கப்படுகின்றன. சில எழுத்துக்களின் பேர்கூடத் தெரியாத தமிழ் மாணவர்கள் காலேஜ் வகுப்பு வரையிலும் ஏறுகிறார்கள். எழுத்து 247-ல் பெரும்பாலன கற்றிருக்கிறார்கள்; இவர்கள் தமிழ் எண்களோ வென்னில் ஒன்றுந் தெரியாது ஒன்றுக்கு கீழ்ப்பட்ட எண்களிலே, தமிழ்கணக்குப்போடுவது எவ்வளவு சுலபமான தென்பது, அதிற் பழகினவர்களுக்கே தெரியும். இதன் அருமை இப்பொழுதுள்ள மாணவர்களுக்குத் தெரியாது. ஆங்கில முறைப்படி போதிக்கும் ஆசிரியர்களுக்குந் தெரியாதென்னலாம். இப்பொழுது தமிழில் உயர்ந்த பரீக்ஷையாகமதிக்கப்படும் வித்துவான் பட்டப்பரீக்ஷைக்குக் கூடத் தமிழ்க்கணக்குச் சிறிதும் பழகவேண்டியதில்லை.

இங்ஙனமே நந்தமிழ்க்கல்வி போய்க்கொண்டிருப்பின், இன்னங் கொஞ்ச நாட்களுக்குள் தமிழ்க்கணக்கே முற்றும் மறைந்துபோமென்பது திண்ணம். இவற்றைத் தமிழர் அனைவரும் கவனித்து வேண்டுவன செய்வார்களாக. தெய்வமுந்துணைசெய்க. (சு மி.)

நான்

நான் என்னும் அகங்காரமே, ஒருவனைப் பல்வேறு துன்பங்கட்குட்படுத்தி, இன்பக்கடலைக் காணவிடாமற் செய்கின்றது.

நான் செய்தேன்; நான் உயர்ந்தவன்; நான் பண்டிதன்; நான் அதிகாரி; நான் கொடுத்தேன்; நான் தனிகன்; நான் கட்டினேன்; நான் பெற்றேன்; நான் நடந்தேன் என்னும் மொழிகள் முற்றிலும் அகங்காரத்தினுலுதித்தன.

நானென்னும் 'அகங்காரம்' மனிதனுக்குக் கொடிய சத்துரு. மனிதனுக்குச் 'சத்துரு' கூடவே கூடாது. அச் 'சத்துரு' வினுல் பலகாலும் பல்வேறு 'துன்பங்கள்' விளைந்து கொண்டே யிருக்கும்,

ஆகலின், அகங்கார மென்னும் 'சத்துரு'வை "ஞானம்" என்னும் கோடரியால் வேருடன் வெட்டி மாய்த்தல் வேண்டும்.

அதாவது, ஞானத்தால் "பிரபஞ்சம்" (உலகம்) "மாயை" என்றும், இச்சரீரம் அநித்தியமென்றும், "பெண்டு, பிள்ளை, பந்து, மித்திரர், மாடு, மனை. வீடு, நிலம், செல்வம்" முதலியன நீர் மேற் குமிழியென்றும், எஞ்ஞான்றும் அழியாப் "பரம்பொருள்" ஒன்றுண்டென்றுமுணர்தல் வேண்டும்.

'ஞானம்' உதயமானுல் "நான்" என்னும் 'அகங்காரம்' எழவே எழாது. "நான்" என்னும் 'அகங்காரம்' ஒழிந்தால் "ஜீவகாருண்யம்" உண்டாகும். ஜீவகாருண்யத்தால் "எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கி உபகரிக்கச் செய்யும்" கொலை, புலை, முதலிய அடாத செயலையகற்றும். "அறம், பொருள், இன்பம், வீடு" என்னும் சதுர்வித புருடார்த்தங்களைத் தரவல்லது ஞானமேயாம்.

இந்த ஞானத்தைத் தடுப்பது "நான்" என்னும் "அகங்காரம்." ஈண்டு யாம் "இன்பம் தேவையா? துன்பம் தேவையா?" என்று வினவுவோமாயின், அந்தோ! யாவரேனும் "துன்பம்" வேண்டுமெனச் சொல்வார்களா? மாட்டார்கள். இன்பம்தான் வேண்டுமெனச் சொல்வார்கள். இன்பமடைய வேண்டுவோர் "நான், என்னும் அகங்காரத்தை விட்டொழித்தல் வேண்டும். அகங்காரமற்ற விடம் "அன்பு" ததும்பும். அன்பே ஞானம்; அன்பே சிவம்; அன்பே வீடு. (மோக்ஷம்) ப—ர்.

தமிழ்ப் பெருந்தேவி
திருப்பள்ளி யெழுச்சி

ஸ்ரீமான் ச. த. சற்குணர் B. A. அவர்கள் மாணவர்

அ. கி. பரந்தாம முதலியார் எழுதியது

மருளுடை மணவர் மனத்துறு மாசு
மாணுறு ஞானமே கண்டுழி மறைந்து
தெருளுடை முறையெனத் திகழ்ந்தது வானும்;
தடம்பெரு 1-மரகதக் குரகதம் பூணும்
உருளுடைத் தேர்மிசை 2-அருணனு முதித்தான்;
உலகினில் மக்களு மெழுந்தன ருவந்தே;
பொருளுடைப் பாவலர் போற்றிடும் பைந்தமிழ்ப்
பூவையே! பள்ளி யெழுந்தரு ளாயே! (1)

வானெனுங் கானினில் வருந்திசை பலவும்
வண்ணமாய் ஓடிடும் 3-மௌவலங் கொடியின்
தேனுறு வெண்ணிற மலரென மிளிருந்
தண்கதிர் 4-உடுக்களுந் தலைமறைந் துற்ற;
மானிகர் மாதரார் முகநிகர் மதியும்
மறைந்தது; மாண்புடன் எழுந்தனன் கதிரோன்;
நானிலம் வேண்டிடு **நந்தமிழ் அணங்கே!**
நலமுடன் பள்ளி யெழுந்தரு ளாயே! (2)

கானமும் மலைகளுங் 5-கடிமலர்ச் சோலையுங்
கழனிகள் குளங்களுங் 6-கவினுறு ஆறும்
வானினை நாடிடு மாளிகை பலவும்
வெள்ளியம் 7-மன்றென மிளர்ந்தன எங்கும்;
8-கோனென இலகிடுங் கோள்களின் வேந்தும்
குணக்கடல் நின்றுமே எழுந்தனன் சிவந்து;
தேனினும் இனித்திடுந் தண்டமிழ் **அணங்கே!**
தையலே! பள்ளி யெழுந்தரு ளாயே! (3)

தன்னருங்கா தலன் தனிமுகஞ் செய்த்தே
தண்ணிடக் கண்டிட இளநகை மலரும்

குறிப்புரை:—1-மரகதக்குரகதம் - பச்சைக் குதிரைகள், 2-அருணன் - சூரியன், 3-மௌவலங்கொடி - அழகிய மல்லிகைக் கொடி, 4-உடுக்கள் - நட்சத்திரங்கள், 5-கடி - வாசனை, 6-கவினுறு - அழகு மிக்க, 7-மன்றம் - வெளி, 8-கோனென இலகிடுங் கோள்கள் வேந்து - சூரியன்.

பொன்னணி காதலி பொலிமுகம் போன்றே
   மலர்ந்தன தாமரை நன்மலர் எங்கும்;
துன்னிய குரங்கினம் மரக்கிளை ஏறித்
   துள்ளிக் குதித்திடு நீண்மலை மன்னுந்
தென்றிசை நாடுறுந் தண்டமிழ் அணங்கே!
   தையலே! பள்ளி யெழுந்தரு ளாயே! (4)

9-ஆறலைத் துண்ணலே அறமெனுங் கால
   ஆரிருள் மறைந்தது; விரிகட லுலகிற்
10-கோறலும் அறமெனக் கொண்டிடு கொடுங்கோற்
   கொற்றவன் என்றிடும் பெருமதி தேய்ந்தது;
மாறுறு பகைவரை மடித்தொழித் தாளும்
   பிரித்தனிச் சூரியன் எழுந்தனன் ஈண்டு;
11-சாறயர் தென்றிசைச் செந்தமிழ்ச் செல்வீ!
   சீருடன் பள்ளி யெழுந்தரு ளாயே! (5)

கொலைத்தொழில் வல்லநற் கொற்றவர்க் கண்டு
   கொடுஞ்சம ரிடையொடிந் தோடுநர் எனவே
உலகினில் நிலவிடு பிறமொழி யவைபால்
   உற்றிடு பேரவாக் காரிருள் இரிய
நிலைதிசை எங்கணும் தன்மொழி ஆர்வத்
   தனிக்கதிர் முளைத்தனன் தன்னொளி விரித்து;
கலைபயில் 12-மேற்றிசைக் கவினுறு தமிழென்
   கன்னியே! பள்ளி யெழுந்தரு ளாயே! (6)

மனைதொறும் மனைதொறும் மாண்பெருஞ் சேவல்
   மணிநிறச் சிறகெனுங் கையினைக் கொட்டிப்
புனைபெறு கன்னியே! எழு! எழு!! என்று
   பண்பொடு கூவிடு முறையென இந்நாள்
13-கனைகட லுலகினிற் கடிதெழு கென்று
   கூவின அச்சிடு யந்திரச் சேவல்;
தினைப்புனஞ் சூழ்ந்திடுந் தண்டமிழ் நாடாள்!
   தையலே! பள்ளி யெழுந்தரு ளாயே! (7)

14-பொருகட லுலகெலாம் பொதுவொழித் தாண்ட
   15-பொருவிலாப் புகழுடைப் பாண்டியர் முன்னர்க்
கருதியே போற்றிட நிறுவிய கழகம்
   கவினுறு தலையிடை கடையெனு மூன்றே;

9-ஆறலைத் துண்ணல் - வழிபறித்துண்ணல், 10-கோறல் - கொல்லுதல், 11-சாறு - திருவிழா, 12-மேற்றிசை - மேல் நாட்டினர் ஆங்கிலர் முதலாயினோர், 13-கனைகடல் - சப்திக்கின்ற கடல், 14-பொரு கடல் - கரையில் மோதிக்கொண்டிருக்கும் கடல், 15-பொருவு இலா - ஒப்பு இலாத.

அருளுறு மிந்நாள் அளவிலா அவைதாம்
   ஆர்வமாய் இயற்றியே அழைக்குவர் நின்னை:
பொருளுடை நாவலர் போற்றிடுந் தமிழே!
   பொற்புடன் பள்ளி யெழுந்தரு ளாயே! (8)

16-மழைக்குலம் முகந்திடும் பொருகடல் முற்றும்
   17-தீவினி னின்றுநற் புகைக்கல மேறித்
தழைவளம் பெருகிடு நம்மருந் தேயம்
   தங்கியே உலவுவள் ஆங்கில மாதும்;
பிழையிலா வனப்புடைப் பொற்றொடி நீயும்
   பெறுமவள் கையினைப் புகழுறப் பற்றிக்
குழைந்துடன் நடந்திடத் தண்டமிழ் அணங்கே
   கடிதினிற் பள்ளி யெழுந்தரு ளாயே! (9)

என்றெமை யாட்கொளும் எழிலுறு அணங்கே!
   எந்தமிழ்க் கன்னியே! எமக்கொரு விளக்கே!
மன்னிடும் உயிருடல் மாண்பொருள் அனைத்தும்
   மகிழ்வுடன் நின்பதம் இட்டுமே நிற்பதம்;
நின்னருு வரவினை நாடியே இந்நாள்
   நின்றனர் நந்தமிழ் அரசியல் மக்கள்;
18-உன்னரு நெடும்புகழ் உற்றிடு மாதே
   உவப்புடன் பள்ளி யெழுந்தரு ளாயே. (10)

16-மழைக்குலம் - மேகக்கூட்டம், 17-தீவு - ஈண்டு ஆங்கில நாடு என்க, 18-உன்னரு - நினைப்பவற்கு அருமையான.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
   இனிதாவ தெங்கும் காணோம்,
பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும்
   இகழ்ச்சி சொலப் பான்மைகெட்டு
நாமமது தமிழரென கொண்டிங்கு
   வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
   பரவும்வகை செய்தல் வேண்டும்.

—சுப்பிரமணிய பாரதியார்.

பொருளழகு

பொருளுடையீர்!

முத்தொழிற்கும் முதல்வனுகிய பரம்பொருளின் பெருங்கருணையால் இப்பிறப்பில் பொருளைப் பெற்றோர் நல்வழியிற் செலவு செய்து அப்பொருளை யழகு படுத்தல் வேண்டும்.

"கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டு வந்து
வைப்பென விரப்போர்க் கீந்து வருபவ ருளறேற் கூற்ற
மெய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவனின் பத்தாழ் வார்"

என்றுரைக்கப்பட்ட நீதி வாக்கியத்தை யறிந்து அதன்படி யொழுகல் வேண்டும்.

பொருளுடையோர் திருப்பணி முதலிய கைங்கரியத்திற்கும், உண்மையாகிய ஞான சாத்திரங்களை விருத்தி செய்வதற்கும், சிவனடியார்கட்கும், மற்றும் ஏழை ஜனங்கட்கும், உதவி புரிந்து அவைகளை ஆதரித்து வந்தால், இம்மையிற்புகழும், மறுமையிற்சுவர்க்கமும் (மோக்ஷம்) பெற்றுய்வர்.

இப்படிச் செய்வதுதான்; நல்லறமாகும்; நல்வழியாகும்; நல்லழகாகும்; நற்றுணையாகும்; நற்புகழாகும், நாளும் விளங்கும்; நமனும் அஞ்சுவன்; நற்பதவியும் கிடைக்கும்.

இங்ஙனம், பொருளை அழகு படுத்துவதற்கு எத்துணையோ நல்ல வழிகளிருக்க, அவற்றைக் கவனியாது, நீதி யரியாது, நிலை தெரியாது, வீண் ஆடம்பரங்களிற் பொருளை செலவு செய்து படாடோபமானப் பட்டங்களையும், புகழையும் பெறுவதுதான் தான் பெற்ற பொருளுக்கு அழகென்றெண்ணி "கோள்களுக்கும், கோலைக்கும், கள்ளுக்கும், சூதுக்கும், வாதுக்கும், தாசிக்கும்" செலவு செய்து 'வறுமை' யடைந்து பூனைபோல் விழித்திருக்கும் பணக்கார ஏழைகளை யார்தான் மதிப்பர். உபசரிப்பர். இப்படித்தாய துன்மார்க்க விஷயங்களிற் செலவு செய்யும் பொருளுடையோருக்கு பொருளுள்ள மட்டும் புகழ்ச்சிதான். பொருளழிந்தபின் இகழ்ச்சிதான்.

ஆதலின், சன்மார்க்க விஷயங்களில் பொருளை செலவு செய்து, வறுமைக்குட்பட்ட போதிலும், அவர்கள் என்றும் பொருளுடையவராகவே விளங்குவர். யாவரும் அவர்களை இடைவிடாது உபசரிப்பர். என்றும் மகிழ்ச்சி, புகழ்ச்சி அவர்கள் பால் தாண்டவ மாடா நிற்கும்

இனியேனும், பொருளுடையோர் எவ்வழியில் செலவு செய்தல் நலமென்பதைக் கவனிக்கப் பிரார்த்திக்கின்றனன். சுபம்!

ப—ர்.

இந்திரியஜித்

தமிழ் சுயராஜ்யா ஆசிரியர்

சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதுவது

ஒரு காலத்தில் இந்திரியஜித் என்ற ஒரு அந்தணன் இருந்தான். அவன் சமரச புத்தி யுடையவன். இவ்வுலகு முழுதும் ஜனங்களுக்குப் பொதுவாக உரியதே யொழிய, ஒருவருக்குமட்டும் சொந்தமில்லை என்னும் கொள்கை யுள்ளவன். தன் கொள்கையைப் பலருக்கும் பரவச் செய்தான். சிங்கம், புலி, திமிங்கிலம் முதலிய எல்லா பிராணிகளிடமும் பழகி யிருந்தான். பயமென்பதை அறிந்திலன்.

இந்திரியஜித், ஒரு மைதானத்தில் இரண்டு ஏகர் நிலத்தில் புஞ்சை தானியங்கள் விதைத்தான். அந்நிலத்திலேயே தனக்கு வீடு அமைத்துக்கொண்டான். ஒரு பெரிய கிணறும் தோண்டிக் கொண்டான். கிட்ட இருந்த ஒரு கிராமத்துப் பிள்ளைகளுக்காக தன் இடத்திலேயே ஒரு பள்ளிக்கூடச் சாவடி கட்டினான். அப்பிள்ளைகளுக்கு நூற்கவும், நெய்யவும், பயிர்செய்யவும் கற்றுக்கொடுத்தான். இப்பிள்ளைகளுக்கும், மைதானத்தில் ஒவ்வொரு ஏகர் கொடுத்து, தன் மாதிரியே பயிர் செய்தும், நெய்தும் ஜீவிக்கும்படி செய்தான். அந்தக் கிராமத்தில் இத்தகைய முயற்சி பெருகியதால், வறுமையற்றது. அந்தக் கிராமத்திற்கு சாந்தபுரி என்று பெயர் வந்தது.

அப்பக்கத்து அரசன், பூபதி என்போன், அவன் உலகெல்லாம் தனக்கே உரியது என எண்ணினான். அவன் இந்திரியஜித்தின் வரலாற்றைக் கேட்டு, தன் ஆட்களை அனுப்ப, அவனிடம் தக்க வரி வசூல் செய்து வரச் சொன்னான். ஆட்கள் சாந்த புரிக்கு வந்தனர். இந்திரியஜித்தை கூர்ந்து பார்த்து, "நீர் யார் உத்திரவின்மேல் இந்நிலங்களை அநுபவிக்கின்றீர்?" என்றனர்.

இந்திரியஜித்:— நீர் யார் உத்திரவின்மேல் என்னை இக்கேள்வி கேட்கிறீர்?

சேவகர்:—எங்கள் அரசன் உத்திரவின்மேல் கேட்கிறோம். இது யார் நிலம் தெரியுமா?

இந்தி:—இது பூமாதேவியின் நிலம்.

சேவ:—இந்த பூமியெல்லாம் யாருக்கு உரியது தெரியுமா?

இந்தி:—பூமியிலுள்ளோர் எல்லாருக்கும் சமமாக உரியது.

சேவ:—எங்கள் ராஜா யார் தெரியுமா?

இந்தி— அவனும் இதோ நிற்கும் குடியானவனைப்போல் ஒரு மனிதன் தான். பயத்தினால், சேனைகளை வைத்துக்கொண்டு, மிரட்டுகிறான்.

சேவ:—எங்கள் ராஜா இல்லாவிடின் பூமியெல்லாம் என்ன ஆகும் யோசியுங்கள்!

இந்தி:—பூமியெல்லாம் பகல் கொள்ளை யல்லாது, க்ஷேமமாய், அடிமைத்தனமின்றி உழைக்கும், ஏழைகள் மகிழ, உலகம் வறுமை நீங்கி இருக்கும். சண்டையில் இத்தனை ஜனங்கள் மடியாது. பேராசையின் உருவே அரசன்.

சேவ:—ஓகோ! நீர் பெரிய ராஜத்துவேஷியா யிருக்கிறீர்.

இந்தி:—நான் பெரிய டம்பத்வேஷி, பணக்காரரின் அக்ரமத்வேஷி உம்மைப்போன்ற அடிமையல்ல.

சேவ:—உம்மை 124-வது செக்ஷன் படி அரஸ்டு செய்வோம்.

இந்தி:—காயத்ரியின் 24-அக்ஷரமே என் செக்ஷன். வேறொருவரும் என்னைக் கட்ட முடியாது.

இப்படிச்சொல்லிய இந்திரியஜித்தின் மொழிகள் அரசனுக் கெட்டவே, அரசன் வெகுண்டு ஒரு பெரிய சேனையை அனுப்பி இந்திரியஜித்தை அழைத்து வரச்சொன்னான். சேனைவீரர் இந்திரியஜித்தை ஒரே தூக்காய் தூக்கிவந்து அரசன் முன் விட்டனர். அவன் அரசனைப்பார்த்துச் சொன்னதாவது.

ஐயா! நீரும் எம்மைப்போல் ஒருமனிதன். எமக்கும் உமக்கும் உயிர் வேறா? பசி வேறா? பிணி வேறா? ஆத்மா வேறா? இருவருக்கும் சுமேச்சை ஒன்றே. புவித்தாயின் பலனை இருவரும் அனுபவிக்க உரிமையுண்டு. எத்தனை ராஜ்யமாண்டாலும் உம் வயிற்றில் போவதும் ஒரு கவள அன்னந்தான். உமது ஒரு சாண் வயிறு வளர்க்க ஆயிரம் ஏழைகள் சுயேச்சையாய் உழுதுண்ணக்கூடிய நிலத்தைக் கைப்பற்றினீர். உமது எண்சாணுடல் இருப்பதற்காக, ஆயிரம் ஏழைகள் வசிக்கக்கூடிய நிலத்தில் வீடுகட்டிக் கொண்டீர். நீதியுரைப்போரைப் பயமுறுத்த சேனையை வைத்திருக்கிறீர். குடிகளிடம் தாங்கள் பயப்படுவதனாலேயே சேனைகளை வைத்திருக்கிறீர். தங்களிடம் அன்பும், பரோபகாரமும் இரு

ந்தால் தங்கள் ஒருவருக்காக இத்தனைபேரை வருத்தமாட்டீர்களென்றான்.

இதைக் கேட்டு அரசன் கோபநெருப்பால் மொழிப்பொறிகள் சிந்தினன். அடே ராஜத்துரோகி! உன்னை இதோ வெஞ்சிறைபாக்குகிறேன் என்று இந்திரியஜித்திற்கு விலங்குகள் மாட்டிச் சிறை யிட்டான்.

இச்செய்தி தெரிந்தவுடன் சாந்தபுரத்தினர் தைரியங் கைவிடாது இந்திரியஜித்தின் கொள்கைகளுக்காகத் தன் உயிர் கொடுக்கச் சித்தமாயினர். இந்திரியஜித்தின் இடத்தில் உத்தமன் என்ற தலைவன் ஏற்பட்டான். அவனுக்கும் அரசன் அள்விட்டு வரிகேட்டார். அவனுந் தரவில்லை. அவனையும் உடனே சிறையிட்டார். உத்தமன் இடத்திற்கு வேறொருவன் வந்தான். அவனையும் சிறையிலடைத்தனன். இப்படி முறை முறையாய் நூற்றுக்கணக்கான நல்லோர் சிறைபுகுந்தனர். இதைப்பற்றியே உலகெங்கும் பேச்செழுந்தது. உலகில் சிலர் இந்திரியஜித்தின் கொள்கைகளைப் பின்பற்றத் துணிந்து அவர்களும் சிறைசென்றனர். அரசனும், இந்திரியஜித்தைப் பற்றிப் பேசுவோருக்கெல்லாம் சிறையில் இடமீந்தான். சிறை ஆயிரக்கணக்கான வீரர்களால் நிறைந்தது. அங்கு நிறைந்த வீரருக்கெல்லாம் இந்திரியஜித் தன் கொள்கைகளைக்கூறி, அவர் மனதைத் திடப்படுத்தினன். இவ்வளவு பேருக்கும் உணவுச்செலவே மிகுதியானது. சிறை கொள்ளாது, தன் நகரிலுள்ள மாளிகைகளை யெல்லாம் சிறையாக்கினன். மறுபடியும் ஜனங்கள் சிறையை நிறைத்தார்கள். இந்திரியஜித்தின் கொள்கைகள் உலகெலாம் பரவிற்று. அரசன், இந்திரியஜித்தை, முடிவில் தூக்குப்போடுவதாயும், அவனைச் சேர்ந்தவரைப் பட்டினி போட்டுக் கொல்லுவதாயும் தீர்மானித்தான். இதைக் கேட்ட எல்லா ஜனங்களுக்கும் ஒரு வீராவேசம் பிறந்தது. உடனே எல்லா ஜனங்களும் அரண்மனையை வளைந்துகொண்டனர். சிறைகளை உடைத்தனர். இந்திரியஜித்தும், மற்றோரும், சிறையினின்று வெளியே வந்தனர். அரசன் வெகுண்டு கூட்டத்தை நோக்கி சுட்டான். நாலைந்துபேர் இறந்தனர். இந்த மிருகத்தனத்தைக் கேட்ட மற்ற ஊராரும் கூடி அரசனுடைய காவலை யெல்லாம் தள்ளிக்கொண்டு அரண்மனைக்குட் புகுந்தனர். எல்லாச் சேவகர்களும் ஜனங்கள் பக்கமே சேர்ந்தனர். அரசன் சிறையிடப்பட்டான். ஜனங்கள் குடியரசு ஏற்படுத்தினர். இந்திரியஜித்தைத் தம் தலைவனாக்கினர். தன் தனக்கு உழுதுகொண்டு வாழப்போதிய நிலத்தைப் பிரித்துக்கொண்டு சுயேச்சையாய் வாழ்ந்தனர்.

"நாமார்க்குங் குடியல்லோம்"

விதவா விவாகம்

சென்னை; 'தமிழ்நாடு இளைஞர் நல்வழி மன்றம்'

அமைச்சர்

திரு. பு. செல்வராஜன் எழுதுவது

கைம் பெண் விவாகத்தைக் குறித்து யாண்டும் பேசப்படுகிறது. எங்கணும் கைம் பெண்களை விவாகம் செய்ய பிரயத்தனங்கள் நடை பெறுவதாகக் கூறிக்கொள்ளப் படுகின்றன. ஆயின் நேருவதென்னை? பேச்சுகள் பேச்சளவிலும், பிரயத்தனங்கள் ஒழுங்கற்றவைகளாகவும் போய் விடுகின்றன. விதவைச் சோதரிகளின் துயர் தீர்ந்த பாடில்லை. கைம்பெண்ணின் தற்போதைய நிலையில் அதாவது, பெண்கள் கல்வி கற்று உயர்ந்திராத நிலையில் அவர்கள் புனர் விவாகஞ் செய்துகொள்ளுதலை மதமும், பழக்கமும் தடுத்துவிடுகிறது. வைதீகர் கோஷ்டியினர் அவர்களை முன்னேறவொட்டாமல் அழுத்துகின்றனர். பேதை பாமர உலகம் அவர்களைக் கண்டு நகைக்கிறது. மத சம்பந்தமாக விதவா விவாகச் சங்கங்களும், சீர் திருத்தக்காரர்களும் விதவா விவாகத்துக்கு வேத ஆதாரங்கள் காட்டி மதம் அநுமதிக்கிறதென எடுத்துக் காட்டியும், வழக்கம் எனும் பேயால் விழுங்கப்பட்டு, அநேகமாக கல்வியற்ற பெண்மணிகள், வைதீகப் பித்தர்களின் கொடுங்கோன்மைக்கு அஞ்சியும், பாமர உலகத்தின் அசட்டுத் தனத்தையும் கண்டு தைரிய மிழந்து விதவா விவாகம் செய்துக்கொள்ள அஞ்சுகிறார்கள். விதவைகளின் தொகையோ நாள்தோறும் வளருகிறது. காரணமென்னை?

பாலிய விவாகம்

பாலிய விவாகமென்பது நம்மிந்தியாவிலே முக்கியமாக நம் ஹிந்து மார்க்கத்தில் தான் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. பாலியத்திலேயே அதாவது குழந்தைகளுக்கு மணம் செய்வித்தலை பொம்மை கலியாணம் எனலாமே ஒழிய அது அறிவுடைமையாகாது. ஹிந்து மார்க்கத்தில் 12-வயதுக்குள் பெண்ணைக் கல்யாணம் செய்துக்கொடுக்காதவன் பெரும் நரகிற்குச் செல்வான் என வருகிறது. வைதீகப் பித்தர்கள் அதைவிடாப் பிடியாக பிடித்துக்கொண்டு அர்த்தமின்றி இன்னும் அழுதுக்கொண்

டிருப்பதைக் கண்டால் வியப்புறவேண்டி யிருக்கிறது. வேதம் கூறுகின்றது, சாத்திரம் சாற்றுகிறது, என்று கூறிக்கொண்டிருந்தால்போதுமா? காலநிலைமை நோக்க வேண்டாமா? ஐரோப்பாவில் 30 வயதில் விவாகம் செய்தவர்க் கேற்றமாதிரி அங்கு சீதோஷ்ண நிலைமையும், ஆப்ரிக்காவில் 8-வயதில் மணம் செய்துக்கொள்ளுவதற்கேற்ற சீதோஷ்ண நிலைமையும், நம் தேச சீதோஷ்ண நிலைக்கு ஒப்பிட்டு அவ்விதமே வயதை நிர்னயிக்க முடியுமா? அதுவுமின்றி ஒருகாலத்தில் பகைவர்களுக் கஞ்சி சிறு பிராயத்திலேயே மணமுடிக்கும் வழக்கம் வந்ததை நிபுண சிகாமணிகள் (பிராமணர்கள்) அதை வேதஸ்மிருதிகளில் செறுகி, இன்று வேதமொழி அதன்படி நடப்பதென்று கூறிக்கொண்டு அழிவதில் யாது பிரயோசனம் உளதென்று அவ்வைதீகர்கள் உணர்கிறார்களா? இல்லை.

ஆகையால், அவ்வேட்டுச் சுரைக்காய்களின் வார்த்தைகளுக் குட்பட்டு நாட்டில் நீண்ட நாளாக பால்ய விவாகம், குழந்தை விவாகம், விளையாட்டு மணம் நிகழ்பெறுவதாலேயே விதவைகளின் தொகை பெருகுகிறது. நாமறிந்த ஒரு இடத்தில் நண்பர்கள் இருவரும் தத்தமக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு மணம்பேசி முடிவு செய்துக் கொண்டனர். ஆண்டவனருளால் ஒன்று ஆணாகவும், மற்றொன்று பெண்ணாகவுமே பிறந்துவிட்டது. குழந்தைகளுக்கு ஓராண்டு முடியுமுன் விவாகம் நிறைவேறிவிட்டது. வயதிலோ 4, 5, மாதங்கள் தான் வித்தியாசம். முடிவு என்ன ஆனது? இரண்டாம் ஆண்டில் ஆண் குழந்தை விண்ணேகியது. பெண்குழந்தை இரண்டாண்டு முற்றும் நிறையப் பெறாத பெண்குழந்தை தன் மழலைச் சொற்களைக்கொட்டி விளையாடிக்கொண்டிருக்கிறது. பின்வரும் தீவினையை அது எவ்வாறறியும்! இதை எதிரில் இருந்து பார்த்தவர்களின் மனம் எவ்வாறிருக்கும்! ஊகியுங்கள்!

நேயர்களே! பாலிய மணத்தின் கொடுமைகளை யானதிகம் எடுத்துக் கூறவேண்டியதில்லை. பாலிய மணத்தினால் ஏற்பட்டுள்ள பயனைப் பின்வரும் விதவைகளின் கணக்கிலிருந்து அன்பர்கள் உணரலாம். இந்தியாவில் ஹிந்துமதத்தில் உள்ள கைம்பெண்களின் எண்ணிக்கை வயது வாரியாகப் பின்வருமாறு:—

1-வயது பூர்த்தியாகாத குழந்தைகள்	597
1-லிருந்து 2-வயது வரை	494
2-லிருந்து 3-வயது வரை	1257
3-லிருந்து 4-வயது வரை	2837
4-லிருந்து 5-வயது வரை	6707

ஆக மழலைச் சொல் மாருமுன்னர் வைதவ்ய மடைந்த குழந்தைகளின் தொகை (5-வயதிற் குட்பட்டது) 11,892-ஆகிறது. அன்பர்

களே! சோதர சோதரிகளே! ஐந்தாண்டு பூர்த்தியாகுமுன் ஓடி யாடிக் களிப்புறுங் காலத்து; மழலைச் சொல்லாடி மகிழ்விக்கும் காலத்து; அக் குழந்தைகளை வைதவ்யப் பாழுங் கிணற்றில் தள்ளி விதவைகள் என வாய் கூசாது எவ்வாறியம்ப முடியும் என்பதை நோக்குங்கள்! அவர்களை உங்கள் குழந்தைகள், சகோதரிகள் ஸ்தானத்தில் வைத்துப் பாருங்கள்! அப்போது அதன் கொடுமை புலனாகும். அதுபோக,

5-வயதுக்குமேல் 10-வயதுக்குள்	85,037
10-வயதுக்குமேல் 15-வயதுக்குள்	2,32,147
15 ,, 20 ,,	3,96,172
20 ,, 25 ,,	7,42,820
25 ,, 30 ,,	11,63,720
ஆகமொத்தம்	26,31,788

மேற்கண்ட தொகையைக் கவனிக்கும் எந்த உண்மை மனிதப்பிறவியின் மனமும் உருகாமலிராது. மனமுருகி அவர்கள்பால் இரங்குவது மட்டும் போதுமா? அவர்களின் துயர் தீர பல நன்மையான காரியங்களை ஒவ்வொரு பாரதத்தாயின் மகனும், மகளும் அவசியம் செய்தே தீரல் வேண்டும். குழந்தைகளின் தொகை மாத்திரம் சற்றேறக்குறைய ஒரு லக்ஷம் எனில் நாட்டின் நிலையை என்னென்பது. இக்குழந்தைகள் தம் பருவத்திற்கு வந்தபின் விடும் கண்ணீர் அருவிப்பெருக ஆண்மக்கள் சுதந்தரம் அடைவது எப்படி? நம் சோதரிகள் குழந்தைகள் அல்லும் பகலும் ஆற்றொணாத் துயரில் அழுந்திக்கிடக்க நாம் சந்தோஷமாக வெளியில் உலவுவது எப்படி? அவ்வளவோடேனும் போகிறதா? மதக் கட்டுப்பாடு எனும் கொடுமை வேறு அவர்களை மனம் புண்படச் செய்கிறது. எத்தனையோ குடும்பங்களில், நாத்தி, மாமி, சகோதரன், சகோதரனின் மனைவி முதலியோர்களின் கொடுமை தாங்காமல் உயிர் துறக்கின்றனர். எதிரில் வரக்கூடாது. நல்லவைகளைப் பார்த்தல் ஆகாது. நல்ல ஆடை ஆபரணங்களை அணிதல்கூடாது. வாசனைகளை முகரக்கூடாது. தலையில் கேசம் வைத்தலாகாது என்பனபோன்ற கடுஞ் சட்டங்கள் நம்மதத்தி லிருந்துக்கொண்டு கடுங்காவல் தண்டனைப்பெற்ற கைதியினும் கேவலமாக நம் பெண்மணிகளைச் செய்துவிடுகிறது. இவைகளைச் சகித்திருப்பதெனின் குழந்தைகளுக்கு, கன்னிப்பெண்களுக்கு எவ்வாறு முடியுமென நடு நிலையினின்று ஆராய்ந்துப் பாருங்கள்! நாம் இவ்வாறு கூறுவதைக்கண்டு, அறிவிலிகளும், மூடபாமர ஜனங்களும், ஏட்டுச் சுரைக்காய்களும், வைதீகப் பித்துகளும் கோபம் அடைவார்களென நாமறிவோம்.

பிறமதங்களில் பெண்களின் நிலை எவ்வாறிருக்கிறதென நாம் கவனித்தல் அவசியம்.

அநேகமாக தற்போது உலகிலுள்ள மதங்களாகிய இஸ்லாம் மதத்திலும், கிறிஸ்தவ மதத்திலும் விதவாவிவாகம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மதத்தில் விதவைகளின் தொகை அதிகம் கிடையாது. சிசுஹத்தி கிடையாது. விபசாரம் பெருகுவதில்லை. அவர்களின் மனமும் ஒழுங்குபொருந்திய முறைப்படிக்கி வருவதால் பின்னால் பெண்மக்கள் துன்பமடைய வேண்டுவதில்லை. தவிர, நம்மதத்தில் உள்ள வைதீகர்களின் பித்தவாதத்திற்குப் பயந்து நம் பெண்மக்களை துன்புறுமாறு செய்யாதீர்கள். பெண்கள் விடும் கண்ணீர் நாட்டை யழிக்கும் வாளாகும். மூடர்களுக்கும், வைதீகர்களுக்கும், பெண்ணின் நிலை, மணஞ்செய்யும் முறை, புனர் விவாகம் அவசியம் போன்றவைகளை எடுத்துக்கூறி அவர்களையும் நன்மார்க்கத்தில் திருப்பவேண்டியது ஒவ்வொரு சீர்திருத்தக் காரரின் கடமையாகும்.

15-வயதுக்குட்பட்ட விதவைகளை ஒவ்வொரு வாலிபரும் மணம் முடிக்க ஒருமைப்படுதல் வேண்டும். ஆண்களில் மனைவியை யிழந்தோர் தாங்கள் இரண்டாவதாகக் கலியாணம் செய்யும்போதும் விதவைகளையே கலியாணம் செய்ய வேண்டுமே யொழிய, சிறு பெண்களையும், கலியாணமாகாத கன்னிப் பெண்களையும் மணத்தல் கூடாது என்ற ஒரு முறை அமைத்துக்கொண்டு அதன்படி யொழுக பிரசாரம் செய்யுங்கள்!

அங்காங்கு இளம் விதவைகளின் துயர் தீர விதவா விவாகச் சங்கங் கண்டு அதை ஒழுங்குடன் நடத்தவேண்டும். ஏனெனில், ஆண்மக்களிலுள்ள கயவர்கள் புரியும் கொடுமை உலகில் வெளிப்படாத தல்ல. அநேக சங்கங்கள் ஏமாற்றுதலுக்கு ஆளாகி யிருக்கிறது. அநேகர் பெண்களை மணம் புரிந்துக்கொண்டு பிற்காலத்தில் ஆதரவற்ற நிலையில் அவர்களைத் தவிக்க வைக்கின்றனர் அவ்வாறெல்லாமின்றி ஒழுங்கான முறைப்படி ஒழுக்கமுடைய ஆண்மக்களை உள்ளன்போடு மணக்கத்தக்க முறைகளை சங்கங்கள் கையாடல் வேண்டும்.

இதுபோன்ற காரியங்களுக்கு.ஏற்படும் இன்னல்கள் பலப்பல. அவ்வின்னல்களைக் கண்டு சலிப்புறாது ஊக்கத்தோடு முயற்சித்தல் வேண்டும். வைதீகத்தையும் மூடப்பித்தத்தையும் கண்டு பயந்தும் மயங்கியும் விடலாகாது. ஆகையால் சகோதரிகளுக்கும், சகோதரர்களுக்கும், தாய்மார்களுக்கும் என் விண்ணப்பம் யாதெனில், காலநிலையையுண்ணி, நன்முறைகளைக் கையாட ஒவ்வொருவரும் இடையில் நேரிடும் இன்னல்களைக் கண்டஞ்சாது முன் வரல்வேண்டு மென்பது எனது பேரவா. இதை ஒவ்வொருவரும் விரைந்து செய்க! தெய்வமும் துணைபுரிக! சுபம்! சுபம்!!

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

சுகாதாரப் பகுதி

திருவண்ணாமலை, ஆயுர்வேத வைத்தியர்
வேங்கடாஜல முதலியார் எழுதியது

பசும் பாலால் உண்டாம் கெடுதிகள்

உத்தம பசுவினது குற்றமற்ற பாலை பகலில் தனியாகவோ, மற்றவற்றுடன் கலந்தோ உபயோகித்தல் கூடாது. இரவிலும் அப்போதே கறந்த புதிய பாலாயினும் முறிப்பு வஸ்து கூட்டி ஜலம் கலந்து விட்டு ஜலம் சுண்டக்காய்ச்சி ஆற்றி ஆடை நீக்கி கற்கண்டுப் பொடி சேர்த்து இரவில் அருந்தலாம்.

இதுவும் கரந்தபின் ஒன்றரை மணிக்குள் தவறின் இரண்டுமணிக்குள் பருகவேண்டின் இந்தக் கால அளவுக்கு மீறியோ முன் கூறிய கவனிப்பை அலட்சியம் செய்தோ பருகினல் பாஷாணங்களை விட கொடிய விஷமாம் என மருத்துவ நூற்கள் இயற்றிய மகான்களின் கொள்கை.

மகாத்மா காந்தியடிகளும் இவ்விஷயமாய் கூறியுள்ளவற்றில் கீழ்க் கண்ட கருத்துகள் மிக்க முக்கியமானவை,

1. நோயற்ற சுகதேகமுடைய நல்ல பசுவைக் காணவியலாது.

2. தாய்க்குள்ள ரோகம் சேய்க்கும் பற்றுமாப்போல பசுவிற்குள்ள ரோகங்கள் அதன் பாலைப்பருகுவோர்க்கு எளிதில் பற்றுகிறது.

3. பசும்பாலைத் தனியாகவோ, காப்பி, தேயிலை, கொக்கோ முதலியவற்றுடன் சேர்த்தோ உட்கொண்டு வரும் குடும்பங்களில் காணியாட்சியாக நின்று சந்ததிகளையுந் தொடர்ந்து பீடித்து வரும் பலவித பித்த-உஷ்ண-கெர்ப்பாசயம்-சூதகவாத-பாலாரிஷ்ட ரோகங்கள் பாலை உபயோகியாத குடும்பங்களில் காண்பதில்லை யென்பது அனுபவம்.

4. காப்பி, தேயிலை, கொக்கோ முதலியவற்றை உபயோகிப்பாரிடம் இயற்கையாகவே காண்கின்ற பலவீனம்-அதைரியம்-இருதயரோகம்-வீண்பயம் ஆண்மை யின்மை-மனக்கவலை-மறதி-சந்தேகம்முதலியன காப்பிக்குடி வகையை பழகாதாரிடம் காணமுடியா.

5. சுத்தமான பசுவின்பாலேயாயினும் இரவில் கறந்து, கறந்த ஒன்னரை மணிநேரத்துள் சமமாக ஜலம் கலந்து மாற்றுச் சரக்கு சேர்த்து பாகமாகக் காய்ச்சி ஆடை நீக்கி கற்கண்டு கூட்டி இரவில் மாத்திரம் அருந்துவோர்க்கே பலவியாதிகள் தோன்றுமென மருத்துவ நூற்கள் கூறுகின்றன வெனில், பகலில் பசும்பாலை உபயோகிப்பார்க்கும் எருமைப் பாலைப் பருகுவார்க்கும் எய்தும் வியாதிகளைக் குறிப்பிடவே அரிது. அனுபவமும் இதுவே.

இந்துமத ஒற்றுமை

ஒற்றுமை நாடுவோன் எழுதியது

இந்து மதஸ்தர்க்குள் ஒற்றுமை யில்லாமையே பெருங்குறை. இதனால் இந்துதேசத்திற்கு வந்திருக்கும் ஆபத்தைக் கவனிப்பாரில்லை. எந்த மதங்களிலும் உட்பிரிவுகளுண்டு இருக்கினும் அவர் அதை தமக்குள் வைத்துக்கொண்டு புறமதஸ்தர்க்கு இடங்கொடாது ஒற்றுமையா யிருப்பர். நம்மவரோ உள்மதத்தில் சண்டையிட்டு ஒருவரை யொருவர் கொலைசெய்யமாட்டாப் பகைமையை எக்காலத்தும் சாதித்துப் புறமதஸ்தர்க்குச் சந்து கொடுப்பதோடு தம் மதத்தவரைப் புறமதத்திற்கு இரையுங் கொடுக்கின்றனர். மதப்பிரசங்கிகள் பேதம் பாராட்டாது சும்மாவிருப்போரை யெல்லாம் தருவித்துத் தமக்கு வேறுபட்ட உள் மதப்பிரிவுகளையும், அத்தேவதைகளையும், அச்சாஸ்திரங்களையும், அப்பெரியோரையும் தூஷித்து இழிமொழிகளால் திட்டிப் பின்பு உட்பிரிவுப் புறமதத்தவர் முகா லோபனமும் செய்ய வொட்டாது போதித்து வருகின்றனர். அப்போதனையைக் கேட்போர், பின்னர் சும்மா விருப்பரா? வாய்ச்சண்டையும், கைச்சண்டையும் செய்ய ஆரம்பித்து புறமதஸ்தரது நகைப்புக்கிட மாகின்றனர்.

இந்து மதஸ்தர் நாடோறும் கிறித்து மதத்தில் ஏராளமாய்ப் போய்க்கொண் டிருப்பதையும், கிறிஸ்து மதமுதலிய புறமதங்களினின்றும் ஒருவரேனும் இந்து மதத்திற்கு வாராமையையும், இங்ஙனமே சிலகாலம் நடக்குமாயின் முற்றுமே இந்து மதம் அபாயமாகுமென்பதையுங் கவனிக்கும் இந்து மதப்பிரசங்கிகள் எவரேனுமுளரோ? இந்து தேசத்தின்கண்ணுள்ள மகம்மதியரும், கிறிஸ்தவரும், முன்பு இந்து மதஸ்தரன்றோ? இந்துமதஸ்தர்க்குள் ஒற்றுமை யிருக்கின் அவர் புறமதம் செல்வாரா? இந்துமத உபந்நியாசகர் இன்றுவது இதைப்பற்றி யோசிப்பதுண்டா? இவ்வுபந்நியாசகர் இந்து மதஸ்தர்க்குளிருக்கும் ஒற்றுமையைக்கெடுத்து இந்து மதத்தை வேரோடு களையுமவண்ணம் இந்து மதவேஷம் பூண்டுவந்த இந்து மதத் துரோகிகளென்றே கூறத்தகுமன்றி வேறு யாதுபகரத் தக்கது? காமக்குரோதாதி துர்க்குணங்கள் நிறையப் பெற்றுச் சற்குணங்களின்றிச் சாதுக்கள் சகவாசத்தை ஒரு நிமிஷமும் செய்யாது சகல மதங்களின் ரகசியங்களைப் பாரபக்ஷமின்றி உண்மையாய்த் தெரிந்துக்கொள்ளாது யாவுந் தெரிந்ததாய்ப் பணப்பால் குடித்துப் பிரசங்கிகளென வேற்பட்டுத் தம் துர்க்குணங்களை யெல்லாம் பிரசங்கவாயிலாகப் பேதைகளுக்குப் புகட்டிக் கேட்போரை மதவேஷதாரிகளாக மாத்திரமாக்கித் தேச சுகத்தினிமித்தம் ஐக்கியப்பட வொட்டாமல் ஜனங்களைக் காக்கை கூட்டங்களாகவும், நெல்லிக்காய் மூட்டைகளாகவும் ஆக்கிவிட்டார்கள்,

இந்து மதமுடிவு ஒன்றேயாக வேண்டு மன்றிப் பலவாகா. ஏனைய ஒன்றற்கொன்று சாதகமாக வேண்டுவது. ஒவ்வொருவரும் தமது முடிவே முடிவெனக் கூறுவது எங்ஙனம் நியாயமாகும்? நியாயமாயுள்ள முடிவு ஒன்று தவிர ஏனையோர் கூறும் முடிவுகளெத்தனையும் பூர்வ பக்ஷமாகு மன்றோ? பூர்வபக்ஷத்தவர்களும் தம்முடிபே முடிபெனப் பிரசங்கிப்பது நீதியாமா? இங்ஙனம் பிரசங்கிப்பவர் தேசத்திற்காவது மதத்திற்காவது நன்மை புரிவரா? தீமைபுரிவரா? தீமைபுரிபவரென ஐயமின்றி கூறத்தகு மன்றோ? மதசித்தாந்தம் சிறிது மறியாத சில அந்தணரும், ஆசிரியரும், கல்வியும் மதமுந் தெரியாப் பேதைகளிடத்தில் சென்று ஏனைய வுள்மதங்களை யிகழ்ந்து தம்மதமே உத்கிருஷ்ண மென வாய்ப்பறை யறைந்து யாவும் தமக்கே தானஞ்செய்யவும், புறமத அந்தணர்க்கும் ஏனையோர்க்கும் ஏதும் தானம்செய்யா வண்ணமும் துர்ப்போதனை செய்வதையும் காண்கிறோம்.

பின்னர், துர்ப்போதனைக் குட்பட்ட நிரக்ஷரகுக்ஷிகளான பேதை களுக்கு உட்பிரிவான இதரமதத்தின்பேரிலும், இதர தேவதைகளின் பேரிலும், இதரமதஸ்தர்களின்பேரிலும் த்வேஷங்கொண்டு அவ்விஷய மாக ஓர் காசுந் தருதலின்றித் தூஷணை செய்வதே பெருந் தொழிலாகக் கொண்டு நாள் கழிக்கின்றனர். இப்படிப்பட்ட சுயமதமின்னதெனவும், பொதுவான இந்து மதம் தினந்தோறும் க்ஷீணித்து வருகின்றதெனவும், முற்றும் வேறான கிறிஸ்துமதம் முதலிய மதங்களில் இந்து மதஸ்தர் செல்கின்றனரெனவும், அங்ஙனம் செல்லாதவிதம் செய்யவேண்டுமென வும் அறிவாரா? இங்ஙனமாயின் ஆண்மையில்லா நபுஞ்சகர் இந்துமதத் தில் அளவற்ற பெரிருக்கின்றனர். மதபோதரும், அந்தணரும், குருக்க கேட்போரும், சீடரும், மடத்தாரும், இன்னும் மற்றவரும் இந்து மதத்திற்கும், இந்து தேசத்திற்கும் நாசமுண்டாவதைக் கவனித்து வர வேண்டும்.

இத்தேசத்து ஆங்கிலேயர் புரிந்துவரும் சூதையும், கபடத்தையும் வஞ்சகத்தையும், துரோகத்தையும் பத்திரிகைகள் மூலமாகவும், சபை கள் மூலமாகவும் உணர்ந்து பிறர்க்கும் அறிவித்து ஒவ்வொரு இந்து வும் சாக்கிரதையாய் விழிப்போடிருக்கவேண்டும். பிரசங்கிகள் உட்பிரி வுள்ள மதங்களை தூஷிபாமலும், சுயமதத்தைச் சிறப்பித்தும் வருவ தில் ஆட்சேப மொன்றுமில்லை. அன்றி, உட்பிரிவுள்ள ஏனைய மதஸ்த ருடன சகோதர பாவனை செய்து அன்பு பாராட்டவும் போதிக்க வேண்டும். மதப்பிரசங்கம் ஒரு பங்கும், தேச க்ஷேமப்பொது விஷயத் தைப்பற்றியும், ஒற்றுமை தேசாபிமானத்தைப் பற்றியும் இரண்டு பங்கு மாகப் பிரசங்கிததல் நன்று. நன்று.

(ஐ—ம்) (இன்னும் வரும்)

பிரபஞ்ச விநோதச் செய்திகள்

உலகில் மிகப்பெரிய கப்பல்

உலகில் மிகப் பெரிய நீராவிக் கப்பல் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான "மெஜஸ்டிக்" என்பதேயாகும். இதன் நிறை 56,551டன். நீளம் 955 அடி; அகலம் 100 அடி. உயரம் 102 அடி. இக்கப்பலில் 15,000 மின்சார விளக்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரயாணத்தின் ஆரம்பத்திலும், பிரயாணிகளின் உணவுக்காக 75 டன் இறைச்சி; 28 டன் மீன்; 30 டன் உருளைக்கிழங்கு; 80,000 முட்டை, $2\frac{1}{2}$ லட்சம் சுருட்டுகள் ஆகிய இவை சேகரித்து வைக்கப்படுகின்றன: 800,000 காலன் தண்ணீரும் நிரப்பப் படுகிறது. இக்கப்பலிலுள்ள எல்லாத் தட்டுகளையும் ஒருமுறை முழுதும் சுற்றிவிட்டுவர ஒன்பதுமைல் நடக்கவேண்டுமாம்.

அதிசய டிக்கட் இபந்திரம்

லண்டன் ரயில்வேக்களில் புதிதாக அமைக்கப் பட்டிருக்கும் அதிசயமான டிக்கட் இயந்திரத்தைப்பற்றி இன்னும் சில விவரங்கள் கிடைத்திருக்கின்றன. இந்த இயந்திரத்தின் துவாரத்தில் அரை ஷில்லிங் அல்லது ஒரு ஷில்லிங் கைப்போட்டால் உடனே அது டிக்கட்டையும் பாக்கி சில்லரையும் வெளியே தள்ளிவிடுகிறதாம். சரியான தொகை கொடுக்கிறவர்களுக்கு அது டிக்கட் கொடுக்குமாம். கள்ள நாணயங்களை எற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடுமாம். இவ்வளவும் அரை விநாடியில் நடக்கிறதாம். டிக்கட் வாங்குகிறவர்களில் 100க்கு 52 பேர் வீதம் பாக்கி சில்லரை கேட்கிறார்கள் என்று இந்த இயந்திரத்தின் மூலம் தெரியவந்திருக்கிறது.

பேசும் புத்தகம்

நியூயார்க் ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனியைச் சேர்ந்த டாக்டர் வில்லிஸ் விட்மான் என்பவர் குருடர்களின் உபயோகத்திற்காக "பேசும் புத்தகம்" ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம். இந்த இயந்திரம் புகைப்படக்கருவியைப் போல் காணப்படுகிறதாம். அதில் சினிமா படச் சுருளைப்போன்ற ஒரு சுருள் பொருத்தப்பட்டிருக்கிறதாம். இயந்திரத்தை முடுக்கியதும் இந்தச் சுருள் புரளத் தொடங்குமாம். அப்போது அதில் எழுதியிருக்கும் விஷயங்கள், இயந்திரத்திலுள்ள ஒலி பெருக்கியின் மூலம் உரத்துக் கேட்குமாம். இவ்வாறு இரண்டுமணிநேரம் பேசக்கூடிய சுருள் ஆறு டாலருக்கு விற்கப் படலாம் என்று மேற்படி டாக்டர் சொல்கிறார்.

பேசும் நாய்

அமெரிக்காவில் பாஸ்டன் கண்காட்சிச் சாலையில் ஒரு பேசும் நாய் இருக்கிறது. அந்நாய் நாம் கேட்கும் கேள்விகளுக்கு வெகு அழகாகப் பதிலளிக்கிறதாம்.

உலகில் பெரிய புத்தகம்

இன்று உலகிலுள்ள புஸ்தகங்களெல்லாவற்றையும் விட பெரிய புத்தகம் திபேத்திய வேதநூல்தான். அதை இப்பொழுது 100 கூலிகள் தூக்கிக்கொண்டு சீனாவிலுள்ள பேகிங் என்ற விடத்திற்குக்கொண்டு போகிறார்கள். அது 200 பாகங்கொண்டதாகும். சீனாவிற்குச் சென்றதும், சீன பாஷையில் மொழி பெயர்க்க சீனப்பாதிரிகள் முடிவு செய்திருக்கிறார்களாம்.

நிர்வாணமே நேர்மைபோலும்

ஆடையின்றி நிர்வாணமாயிருப்பதே உடல் நலத்திற்குப் பொருந்தியதென்ற கருத்துடன் ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகளில் ஒரு கூட்டத்தார் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் நகரங்களைவிட்டு காடுகளில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சங்கமும் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சங்கத்தில் ஆண்களும் பெண்களுமாக ஏறக்குறைய இரண்டு லக்ஷம்பேர்கள் இருக்கிறார்களாம்.

ஹாஸ்யத் துணுக்கு

சபார்டினேட் கோர்ட்டு ஜட்ஜ்—(ஒரு சாட்சியைப் பார்த்து) நீ கள்ளுக் குடிப்பதுண்டா?

சாக்ஷி—ஆம் நான் குடிப்பதுண்டு.

ஜட்ஜ்—எத்தனைப் புட்டிகள் வரையில் குடிப்பாய்?

சாக்ஷி—அரை டஜன் பாட்டல்களை அடேஸ் பண்ணிவிடுவேன்.

ஜட்ஜ்—அப்படியானால் அதோ கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கும் கள்ளைச் சாப்பிடு பார்க்கலாம்!

சாக்ஷி—(இரண்டு புட்டிக் கள்ளை குடித்துவிட்டு மீண்டும் கூண்டில் ஏறி நிற்கிறான்)

ஜட்ஜ்—என்ன அரை டஜன் குடிப்பதாகச் சொல்லிவிட்டு இரண்டு புட்டி மாத்திரந் தானே குடித்தாய்?

சாக்ஷி—கள்ளுக்கடைகளில் விற்கப்படும் கள்ளுகளை நான் சாப்பிட்டிருக்கிறேன். அவை தண்ணீர் நிறப்பப்பட்டிருக்கும்- அதனால் அவற்றை அதிகமாய்க் குடிப்பதுண்டு. ஆனால் சமூகத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்தக்கள்ளு எஜமானுக்கென வந்திருப்பதால் அதிகம் சாப்பிடக்கூடவில்லை. (இ-ன்)

ஒரு வயோதிகவைதீகர் "மதம், போச்சே, மதம்போச்சே என்று" ஓடுகிறார். அப்போது ஒருசிறுவன் ஏன் அப்படித் தாத்தா கத்துகிறீர் மதம் எங்கே போச்சு என்றான்.

வயோதிகர்—பதினான்கு வயதில் குறைந்த பெண்களை மணஞ்செய்ய கூடாதாம். இதற்கென சட்டமும் வரப்போகிறதாம். இந்தச் சட்டம் வந்துவிட்டால் மதம் கெட்டேபோகும்.

சிறுவன்—மதத்தைச் சீர்ப்படுத்துவது எங்ஙனம்?

வயோதிகர்—என்னைப் போன்ற அறுபது வயது கிழவர்கட்கு பத்துப் பனிரெண்டுக்கு மேற்படாப் பெண்களை விவாகம் செய்து வைத்தால் மதம் சீர் பெறும்.

மனைவி—தன் புருடனைப் பார்த்து, நாதா தங்களை மணம்புரிந்த நாள் முதற்கொண்டு நான் எவ்விதசுகத்தையுமடையவில்லையே என்றுதான் கடவுள் கண் திறப்பாரோ தெரியவில்லையே என்றாள்.

கணவன்—அடி 'பைத்தியக்காரி இனி உனக்கு என்ன பயம்! சென்னையில் விதவைகளுக்கென ஒரு சங்கம் ஸ்தாபித்துள்ளனர்சீக்கிரத்தில். நானிறந்தேனாகில் அச்சங்கத்தில் நீயும்போய்ச்சேர்ந்து பணத்தையுடைய வாலிபனை மணந்துகொள், இனி உனக்கு கவலைவேண்டாம்.

உத்தியோகஸ்தர்—கதர் அணிந்திருப்பவரைப்பார்த்து என்ன சுப்பையாவாள் பூரா கதராகவே அணிந்திருக்கிறீரே! ஆனால் உலகத்திற்கு மோக்ஷந்தான்.

சுப்பையாவாள்—ஆமாம் இனி நீங்களும் என்னைப்போல் கதரையே அணியுங்கள்!

உத்தியோகஸ்தர்—நான் வீட்டிற்கு வந்தால்தான் கதரை அணிவது, இல்லையாயின் ஆபீஸில் துரை பார்த்தால் கழுத்தில் கையை வைத்துவிடுவார்.

கிழவன்-ஒரு சிறுபையனைப்பார்த்து அடே இவ்வுலகில் நாமெதற்குப் பிறந்தோம் உனக்குத் தெரியுமா?

சிறுவன்—கிழவரே சொல்லுகிறேன் கேள். உன்னைப்போலுள்ள கிழவரெல்லாம் நரைத்த மயிருக்கு கருப்பு மை தடவவேண்டும். சாவுகிறவரையில் அதாவது 99 வயதாய் விட்டாலும் 10 வயதுப்பெண்ணை மணந்துகொள்ளவேண்டும், இதற்காகத்தான் இவ்வுலகத்தில் மனிதராய்ப் பிறந்தோம்.

(அ—யா)

சமாச்சாரக் குறிப்புகள்

1940-ம் வருஷத்தில் யுத்தம்

1940ம் வருஷத்தில் ஐரோப்பாவில் அமைதியும், அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் யுத்தமும் நிகழும் என்று பிரபல ஜோதிடராகிய மிஸ் இவாஞ்சலைன் ஆடம்ஸ் கூறுகிறாள். ஏழாம் எட்வர்டின் மரணத்தைச் சரியாக முன்னமேயே அறிவித்தவள் இவள்தான். மிஸஸ் ஆடம்ஸ் இப்பொழுது பர்லினுக்குச் செல்லும்வழியில் பாரிஸிலிருக்கிறாள். இதாலியுடனும் ஜெர்மனியுடனும் பிரான்ஸ் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளுமென்றும், ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கும் சட்ட விஷயமாக கிளப்பும் தகராறு சமாதானமாகத் தீர்ந்துவிடுமென்றும், பலவருஷங்களுக்கு பிரான்ஸில் யுத்தம் கிடையாதென்றும், ஆனால் 1940-ம் வருடத்தில் வகுப்பு மதம் முதலியவற்றால் பிளவுகளும், சண்டைகளும் ஏற்பட்டு அமெரிக்காவில் கொடியபோர் நிகழுமென்றும் இவள் கூறுகிறாள்.

கவிழ்ந்து விட்டது

நியூயார்க் மே 7உ

கடலில் சேருவாரியாகிய 'நவசிங்' ஸ்டேன் தீவுக்கருகில் கவிழ்ந்துவிட்டது. இதில் வேலை செய்துகொண்டிருந்த 19 பேர்களைக் காணோம்.

மகாராணி சர்மிஷ்டா பாய்

இந்தூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மகாராஜா துக்காஜிராவ் ஹோல்கார் அமெரிக்கப் பெண்ணான மிஸ் நான்ஸி மில்லரை விவாகம் செய்துகொண்டு அவளுக்குச் சர்மிஷ்டாபாய் என்னும் பெயரிட்டிருக்கிறாரல்லவா? அம்மாதுக்காக வேண்டி அவர் ஒரு திவானை நியமித்திருக்கிறார். வருஷத்திற்கு அம்மகாராணியார் 10,000 பவுன் செலவுக்காகப் பெறுவார்களென்று தெரிகிறது.

மூட்டைப்பூச்சியை யொழித்தல்

உடம்பிலே நல்லெண்ணெயை லேசாகத் தடவிக்கொண்டு படுத்துக்கொண்டால், மூட்டை கடியாதாம். எள்ளுப் புண்ணாக்கைத் தூள் செய்து நெருப்பில்போட்டு வீடுமுழுமையும் புகை காட்டினால் மூட்டை நாசமடையும். எள்ளை இடித்து நெருப்பிலே போட்டுப் புகை காட்டலாம். வீட்டைச் சுத்தஞ்செய்து வெள்ளை யடித்துவிட்டால் மூட்டை சேராது. பினைல் லோஷன் போட்டு வீட்டைக் கழுவினாலும் மூட்டுப் பூச்சி ஒழிந்துவிடும் என்று ஒரு வைத்தியர் சொல்லுகிறார்.

தலைமயிரால் தேச மறிதல்

ஒருவன் எத்தேசத்தைச் சேர்ந்தவனெனக் கண்டுபிடிக்கப் புதியவழியொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். தலைமயிரில் இரண்டொன்றைக் கொண்டு நுட்பமான திராசில் காரணத்து அதைக்கொண்டு கண்டுபிடித்து விடுகிறார்கள், வெள்ளையர்களுடைய மயிரைவிட சீனர், ஜப்பானியர் முதலியவர்களின் மயிர் 100 க்கு 60 மடங்கு அதிக கனமாயிருக்கிறது. நீக்கிரோவர் மயிரைவிட வெள்ளையர் மயிர் 100க்கு 50 மடங்கு அதிக கனமாயிருக்கிறது.

சமுத்திரத்தின் ஆழம்.

சமுத்திரங்களின் ஆழம் இவ்வளவு என்று ஒவ்வோர் இடத்திலும் கண்டுபிடித்து, இவ்விடத்தில் தான் உலகிலுள்ள எல்லாப் பாகங்களையும்விட ஆழம் அதிகம் என்று நிச்சயமாய் உரைத்தல் அரிது எனினும், பல மாலுமிகள் இதே தொழிலை மேற்கொண்டு வெளிக்கிளம்பி சமுத்திரங்களின் ஆழங்களை ஆராய்ச்சி செய்துளர். அவர்கள் உரைப்படி மிகவும் ஆழமான சமுத்திரம் பசிபிக் மகாசமுத்திரம், அதில் பிலிப்பைன் தீவுகளுக்குச் சுமார் நாற்பது மைல் தூரத்தில் நூரிடத்தில் சமுத்திரம் 32,088 அடிஆழம் இருக்கிறதாம், உல

கிலுள்ள எல்லாச் சிகரங்களையும் விடப் பெரியது எவரஸ்ட் சிகரம், அதற்கும் கீழ்குறித்த இடத்திற்கும் சுமார் பதி ஞெண்ணறை மைல்களாக இருக்கிறது இயற்கைத்தாயின் விசாலம் தான் என்னே!

உலகின் ஆதியந்தம்

உலகம் உற்பத்தியாகி இவ்வருஷ ஆரம்பம் வரை 196,08,53,23 வருஷங்களாகியுள்ளன வென்றும், பிரளயம் வந்து அது அழிவதற்கு இன்னும் 233,23,26,977 வருஷங்கள் பாக்கியுள்ளன என்று ஒரு சாஸ்திர ஞானி கூறுகிறார்.

O O O

மதுரையில் மின்சார விளக்குப்போடுவதற்கான வேலைகள் அனைத்தும் செய்து முடிக்துவிட்டன.

O O O

கிரேட் பிரிட்டனில் 46,822 குருடர்கள் இருக்கிறார்களாம்.

O O O

மைசூர் வாணிவிலாச வயித்தியசாலையில் சிலநாட்களுக்கு முன் ஒரு பெண் இருகுழந்தைகளையும் ஓர் ஆண்குழந்தையையும் ஏக காலத்தில் பெற்றாளாம். தாயுஞ் சேய்களும் சுகமாம்.

O O O

மைசூரில் ஓர் அடர்ந்த காட்டு பாகத்தில் சந்தனத் தோப்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இதில் 6 லட்ச ரூபா பெறுமான சந்தனக் கட்டை கிடைக்குமாம்.

O O O

கல்கத்தா பிரசிடென்சி கல்லூரியில் வானசாஸ்திர ஆராய்ச்சி வகுப்புக்காக 40 ஆயிரம் ரூபா செலவில் நவமாகஒரு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

O O O

வடதிருவிதாங் கூரில் அணைக்கரை எனுமிடத்தில் 140 வயதுள்ள கிழக்கணவரும் 110 வயதுள்ள அவர் மனைவியும் உயிரோடிருக்கின்றனவாம்.

O O O

இந்தியத் தாய் எனும் புத்தகமெழுதி இந்தியரை இழிவுபடுத்திய அமெரிக்கா மாது மிஸ் மேயோ குளிர்காலத்தில் இந்தியாவுக்கு வருவாளாம்.

O O O

சென்னைக்கு 22 மைலில் உள்ள தேசூர் எனும் ஊரில் வறுமைநோய் தாளாது ஒரு தாய் தமது இரு சேய்களுடன் கிணற்றில் விழுந்து இறந்தாளாம்.

O O O

மாரிட் எனுமிடத்தில் நீண்ட ஆயுள் பெற்ற ஒரு குடும்பம் இருக்கிறதாம். 127 வயதுடைய அன்னைக்கு 111, 109, 106, 105, வயதுகளுடைய குழந்தைகள் இருக்கின்றனவாம்!

O O O

சிலோனில் 1928ம் வருடத்து 3 மாதத்துக்குள் 20,432 பேர் வெளியிடங்களிலிருந்து வந்து குடியேறினர்களாம்.

O O O

கானடா சுப்ரீம் கோர்ட்டில் நடந்த ஒரு வழக்கில் "மானிடர்" என்ற பதம் ஆண்களையே குறிக்குமல்லது பெண்களைக் குறியாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

O O O

உலகிலுள்ள மிருகங்களில் ஒட்டகையும் பன்றியுமே நீரில் நீந்தத் தெரியாதனவாம்.

O O O

அமெரிக்காவில் ஓர் இந்தியப் பயில்வான் அபூர்வமான வேலைகள் செய்து காட்டுகிறாராம்.

O O O

உலகத்தி மிக நீண்ட ஆயுளுடைய பிராணி திமிங்கலந்தான் என்று தெரிகிறது. மனிதன் கொல்லாதவரையில் சாதாரணமாய் 600 வயதுக்கு முன்னால் அது சாவதிலலையாம்.

O O O

வட ஆப்பிரிக்காவில் பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்ததிலிருந்து, அந்நாட்டிலிருந்த சரித்திர காலத்துக்கு முற்பட்ட மனிதர்கள் பெரும்பாலும் நத்தைகளைத்தின்று உயிர் வாழ்ந்தார்கள் என்று தெரிகிறது. ஓரிடத்தில் 300 அடி நீளமும் 8 அடி உயரமும் உள்ள நத்தை ஓட்டுக் குவியல் ஒன்று அகப்பட்டதாம்.

உலகில் மிகப் பெரிய பூச்சி வெனிஸுலா என்னுமிடத்திலுள்ள யானை வண்டாம், இந்த பூச்சி ஒரு ராத்தல் எடையுள்ளதாம்.

o o o

முயல் பத்து வருஷமும், பூனை 14 வருஷமும் உயிர் வாழுமாம். சில பூனைகள் அபூருபமாக 23 வயது வரை இருப்பதுமுண்டாம். குதிரை, கழுதை, மாடு இவை 15 வயதிலிருந்து 30 வயது வரை சாதாரணமாய் ஜீவிக்குமாம்.

o o o

பட்சிகளில் சில அதிக வாணுளுடையவையாம். வாத்துக்கள் 50 வருஷமும் கிளிகள் 80 வருஷமும் உயிரோடிருக்குமாம். ஆமைகள் 200 வருஷம் உயிர் வாழ்வதுண்டென்று தெரிய வந்திருக்கிறது.

o o o

பார்டோலியில் வரிகொடா இயக்கம் மிகவும் பலமாயிருந்து வருகிறது. நிலைமை மிக நெருக்கடியாயிருப்பது காரணமாக சூரத் ஜில்லா போலீசு சூபரின்டெண்டெண்டு ஆயுதபாணிகளாக போலீஸாருடன் பார்டோலிக்குப் போயிருக்கிறார்.

o o o

உலகில் பெரிய புஸ்தகசாலை தற்போது பாரீஸ் நகரத்திலுள்ள தேசிய புஸ்தகசாலைதானும். அதில் 37,00,000 புஸ்தகங்கள் இருக்கின்றன. அதற்கடுத்தாற்போல் பிரிட்டிஷ் மியூசியம் புத்தகசாலையில் 23,00,000 புத்தகங்கள் இருக்கின்றன. உலகமுழுவதிலும் உள்ள புத்தகம் 18,10,00,000 புத்தகம் இருக்கலாமென மதிப்பிடப் பட்டிருக்கிறது.

o o o

லண்டனில் நடந்த ஒருவழக்கில் மூன்றுமாதர்கள் ஜூரிகளாகவும், ஒரு பெண் பாரிஸ்டர் வக்கீலாகவுமிருந்தார்களாம்.

வியாபாரிகளுக்கோர் விண்ணப்பம்

தக்கசமயம்! மிக்கலாபம்!!

விளம்பரஞ்செய்ய நல்ல தருணம்!

இந்தியா, பர்மா, சிலோன், பினுங்கு, சிங்கப்பூர், மலாய் நாடுகள், தென்னுப்பிரிக்கா முதலிய விடங்களில் ஏராளமாய் இச்சஞ்சிகையுலாவ ஆங்காங்கும் ஏஜண்டுகளை வைத்து இச்சஞ்சிகையை நடத்துவதால், வியாபாரிகள் இதில் விளம்பரஞ் செய்து மிக்க லாபத்தை அடைவார்களாக. வியாபாரத்தில் ஊக்கமுள்ளவர்கள் தங்கள் விளம்பரங்களை நமக்கனுப்பி, பிரசுரிக்கச் செய்வீர்களென நம்புகிறோம்.

விளம்பர விகிதம்

மாதம் 1-க்கு ஒரு பக்கத்திற்கு	ரூபா 8	0	0
,, அரைப்பக்கத்திற்கு	ரூபா 5	0	0
,, கால்பக்கத்திற்கு	ரூபா 3	0	0

எப்போதும் விளம்பரத் தொகையை முன்பணமாகவே கட்டவேண்டும். நீண்டகாலம் விளம்பரஞ் செய்பவர்களுக்கு சகாயஞ் செய்யப்படும்.

விலாசம்—“விவேகபாநு” ஆபீஸ்,
நெ. 20, நம்மாள்வார் தெருவு, முதல் சந்து,
சௌகார்பேட்டை, சென்னை.

விவேகபாநு பஞ்சாங்கம்

விபவஹூ வைகாசிமீ

கலியுகாதி—5030, சாலிவாகன—1851, பசலி—1337,
ஹிஜ்ரி,—1346 கொல்லம்—1103.

இங்கிலீஷ் 1928 — மே — ஜூன்மீ

தமிழ் தேதி	இங்கிலீஷ் தேதி	வாரங்கள்	திதிகள்	நட்சத்திரங்கள்	விசேடகாலங்கள்
1	14	திங்கள்	நவ 4-12	சத 11-46	கர்ப்பாதானஞ்செய்ய
2	15	செவ்	தச 0.40	பூர 10.6	மந்திரம் ஜெபிக்க
3	16	புதன்	துவா 50.52	உத் 6.43	ஆலயாரம்பம்செய்ய
4	17	வியா	திர 45-43	ரே 3-42	பிரதோஷம்
5	18	வெள்	சது 39-16	பர 55-16	மூலிகை உபயோகிக்க
6	19	சனி	● அமா 33-9	* கிரு 51-38	அமாவாசை, கிருத்திகை
7	20	ஞாயி	பிர 27-6	ரோ் 47-52	சந்திரதெரிசனம்
8	21	திங்கள்	துதி 21-25	மிரு 43-57	ஆபரண பூணலாம்
9	22	செவ்	திரு 16-11	திரு 41-19	வாகனம் கொள்ளல்
10	மேமீ 23	புதன்	சது 11-45	புன 38-44	சர்வமுகூர்த்தம்
11	24	வியா	பஞ் 8-12	பூச 37-16	விவாகம், உபநயனம்
12	25	வெள்	சஷ் 5-29	ஆயி 37-4	
13	26	சனி	சப் 3.59	மக 38-5	
14	27	ஞாயி	அஷ் 3-11	பூர 40-19	
15	28	திங்கள்	நவ 4-29	உத் 43-21	
16	29	செவ்	தச 6-27	அஸ் 48-43	
17	30	புதன்	ஏகா 9.29	சித் 53-49	
18	31	வியா	துவா 14-21	சுவா 58-18	
19	1	வெள்	திர 19-16	விசா 60-10	நரசிம்மஜயந்தி
20	2	சனி	சது 24-10	விசா 4.41	காஞ்சி கருடசேர்வை
21	3	ஞாயி	○ பௌ 29-4	அனு 11-50	பௌர்ணமி
22	4	திங்கள்	பிர 32-54	கேட் 18-16	குளம், கிணறுவெட்ட
23	5	செவ்	துதி 36-12	மூல 23-19	கிருஷியாரம்பஞ்செய்ய
24	6	புதன்	திரு 38-18	பூரா 27-51	கணிதாரம்பம்
25	ஜூன்மீ 7	வியா	சது 39-17	உத்ரா 30-29	வாகனமேற
26	8	வெள்	பஞ் 38-52	திரு 31-56	அன்னப்பிராசனம்
27	9	சனி	சஷ் 37-14	அவி 32.21	வித்தியாரம்பம்
28	10	ஞாயி	சப் 34-5	சத 31-43	சுபமுகூர்த்தம்
29	11	திங்	அஷ் 30-34	பூர 29-58	மாடுவாங்க
30	12	செவ்	நவ 26-5	உத்தி 27-39	தானியம்வாங்க
31	13	புதன்	தச 20-57	ரேவ 24-7	கோடி உடுத்த

செ	குரு சுக்	ராடு சூரி	
	10 மிது-பு 12 ரிஷ-சு		
	சனி கே		

PRINTED AND PUBLISHED BY T. C. NAIDU, AT MURAHARI PRESS,
20, NAMMALWAR STREET, 1ST LANE, SOWCARPET, MADRAS.
Editor—S. K. GOVINDASWAMY PILLAI.